பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 18 செவ்வாய்க்கிழமை (02-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:219

# மன்னார் நானாட்டானில் மக்கள் மீது தாக்குதல்!

## ஆட்சேபித்து வீதித்தடை, ஹர்த்தால்

மன்னார்,ஜூலை2

**மன்னார் நானாட்டானில் நேற்றுமுன்தினம் ஊர்மக்கள் பொலீஸாரினாலும் இராணுவத்தினராலும் அடித்து உதைத்து தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.**

**இதனை ஆட்சேபித்து அங்கு பொதுமக்கள் வீதிகளில் ரயர்களை எரித்தும், கடைகளை அடைத்தும் ஹர்த்தால் அனுஷ்டித்தனர். அங்கு பதற்றம் நிலவியது.**

நானாட்டான் பகுதியில் நிரந்தரமாக வசித்துவரும் சில குடும்பங்களுக்கும், இடம்பெயர்ந்து அங்கு வாழும் குடும்பங்களுக்கும் இடையில் முறுகல் நிலை தொடர்ந்து வருகிறது.

நேற்றுமுன்தினம் நானாட்டானில் உள்ள கடைப்பிரச்சினை ஒன்று தொடர்பாகப் பேச, அங்கு நிரந்தரமாக வசித்துவரும் சிலர் புறப்பட்டனர். கூட்டமாக இவர்கள் வருவதைக் கண்ட இடம்பெயர்ந்த குடும்பத்தினர், தங்களைத் தாக்கவே அவர்கள் வருகின்றனர் என்று எண்ணினர். ஓடோடிச் சென்று இதுபற்றி அங்கே இருந்த இராணுவத்தினரிடம் முறையிட்டனர்.

இராணுவத்தினர் உடனடியாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் தாக்கப்பட்டது குறித்து நேற்று உயர்மட்ட மாநாடு

மன்னார், ஜூலை2

மன்னார், நானாட்டானில் நேற்று முன்தினம் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அங்கு நேற்று உயர்மட்ட மாநாடு ஒன்று இடம்பெற்றது.

வன்னி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மகிநாயக்க, விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான வதனன், ரமேஷ் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

பொலீஸாரும், படையினரும் தங்களைத் தாக்கியதாகவும் -

நானாட்டான் இராணுவ முகாமில் உள்ள படையினர் தங்களுக்குத் தொடர்ச்சியாக இடைஞ்சல்களை அளித்து வருவதாகவும் - பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்துக்காக அங்கு வைத்துப் படையினர் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமது மக்கள் ஆதரவைப் புலிகள் தேர்தல் மூலம் நிரூபிக்க வேண்டும்

### வெளிவிவகார அமைச்சர் டிரோன் கூறுகிறார்

லண்டன்,ஜூலை2

இடைக்கால நிர்வாகத்தில் கணிசமான பங்கு புலிகளுக்கே வழங்கப்படும். ஆயினும் அதற்கான மக்களின் அனுமதியை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். தேர்தல் ஒன்றின் மூலம் தமக்கு மக்கள் ஆதரவு இருப்பதைப் புலிகள் நிரூபிக்கவேண்டும்.

- இப்படிக் கூறினார் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

பிரிட்டனிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே இப்படிக் கூறியுள்ளார்.

அண்மையில் நடந்த கிழக்கு மாகாணச் சம்பவங்கள் போன்ற பல சம்பவங்கள் சமாதான முயற்சியைக் குழப்புவதற்காக இடம்பெறலாம். ஆனால், எந்தச் சம்பவமும் சமாதான முயற்சிக்குக் குந்தகமாக அமைய மாட்டாது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளை சுடப்படும் ஒரு துப்பாக்கி ரவை முடிவுக்குக் கொண்டு வரக்கூடாது என்றும் அவர் மேலும் சொன்னார். (ம-3)

### பல்கலைக்கழக மாணவர் மோதல்:

## வாக்குமூலம் பெற மாணவர்களை பொலீஸ் நிலையத்துக்கு அனுப்புக

### நீதிமன்றம் துணைவேந்தருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ். பல்கலைக்கழக மாணவர் குழுக்களிடையே கடந்த மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பான வாக்குமூலங்களைப் பெறுவதற்காக அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை யாழ். பொலீஸ் நிலையத்துக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். நீதிமன்றம் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான தகவல் அறிக்கையை யாழ். பொலீஸார் ஏற்கனவே மன்றுக்குச் சமர்ப்பித்ததை அடுத்து நேற்று இது தொடர்பான பணிப்புரையை யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா விடுத்தார்.

வாக்குமூலம் வழங்குவதற்கு பொலீஸ் நிலையத்துக்கு அனுப்புகின்ற மாணவர்களின் பெயர், விபரங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் துணைவேந்தருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



போர் என்றாலும் சமாதானம் என்றாலும் அடி வாங்கிறது என்னவோ எங்கட மக்கள்தான்.

## லங்கா சிமெந்து நிறுவனம் மீண்டும் காங்கேசனில்

### சிறிய அளவில் இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

லங்கா சிமெந்து நிறுவனம் காங்கேசன்துறையில் உள்ள தனது தொழிற்சாலையில் சிறிய அளவில் இயங்க ஆரம்பித்துள்ளது என்று அதன் தலைவர் அனில் கொஸ்வத்த தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 18ஆம் திகதி இந்தப் பணிக்கான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் தொழிற்சாலைகள் அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீடு ஊக்குவிப்பு, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, லங்கா சிமெந்து நிறுவனத் தலைவர் அனில் கொஸ்வத்த ஆகியோர் பங்குபற்றினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தங்காலை கைதிகள் கிளர்ச்சி முடிவு பணயக் கைதிகளை விடுவித்தனர்

### உள்துறை அமைச்சர் சென்று பேசியபின் தீர்வு

கொழும்பு,ஜூலை2

தங்காலைச் சிறைச்சாலையில் கைதிகள் சிலர் மேற்கொண்டிருக்கும் கிளர்ச்சி நேற்றுப் பிற்பகல் கைவிடப்பட்டது. பணயக் கைதிகளை விடுவித்த அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தனர். உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் நேற்று முற்பகல் சிறைச்சாலைக்குச் சென்று பேச்சுக்களில் ஈடுபட்டதை அடுத்தே கிளர்ச்சி முடிவுற்றது.

கிளர்ச்சியில் ஈடுபட்ட கைதிகள் தப்பிச் சென்றுவிடாதிருப்பதற்காக மேலதிகப் பொலீஸாரும் இராணுவத்தினரும் சிறைச்சாலையைச் சுற்றிவளைத்திருந்தனர். விசேட கொமாண்டோ அணி ஒன்றும் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது.

இச்சிறைச்சாலையில் மொத்தம் 450 கைதிகள் வரை உள்ளனர். இராணுவத்தில் இருந்து தப்பியோடி கைது செய்யப்பட்ட சிலரும் இவர்களில் அடங்குவர். 25லட்ச ரூபா கப்பம் வாங்கிய வழக்கின் எதிரிகளும் அங்கு உள்ளனர்.

முன்னாள் இராணுவ வீரர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறை கண்காணிப்புக்குழு

## புலிகளின் பிரதிநிதிகள் தொடர்ந்து பகிஷ்கரிப்பு!

காரைதீவு,ஜூலை2

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறாது என்று தெரியவருகிறது.

பிரதி செவ்வாய்க்கிழமைகளில் இக்குழுவின் கூட்டம் அம்பாறை தலைமையகத்தில் நடைபெறுவது வழமையாகும். ஆயினும் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டம் இடம்பெறவில்லை. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான இரா.சண்முகநாதன், ஆ.சௌந்தரராஜா ஆகியோர் கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை. அவர்கள் பகிஷ்கரித்தனர் என்று கூறப்படுகிறது.

வழமை போன்று இன்று செவ்வாய்க்கிழமை கூட்டம் கூடவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டு மக்களுக்கு 4ஆம் திகதி பிரதமர் உரை

கொழும்பு,ஜூலை2

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 4ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றவிருக்கிறார். நாட்டின் இன்றைய பொருளாதார நிலை, வாழ்க்கைச் செலவு உயர்வு என்பன குறித்து பிரதமர் அன்று விளக்கவிருக்கிறார். பிரதமரின் இந்த உரை அன்று இரவு 7.30 மணிக்கு வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இடம்பெறும்.

இதற்கிடையே, வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் குறித்து நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி எதிர்வரும் 8ஆம் திகதி விசேட அறிக்கை ஒன்றை வெளியிடவிருக்கிறார்.

(ம-4-12)

### யாழ். குடாநாட்டில்

## கண்ணிகள் இருக்கும் இடங்களை இனங்காணும் பணி அடுத்தவாரம்

### ஆரம்பமாகும் என்கிறார் 'ஹலோ ரஸ்ட்' அதிகாரி

யாழ்ப்பாணம்,ஜூலை2

வடக்கு - கிழக்கில் சகல பகுதிகளிலும் கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ள ஆபத்தான இடங்களை இனங்காணும் பணிகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப் படவிருக்கின்றன.

'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் வெளிக்கள அதிகாரி சிமொன் போட்டர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொள்வதற்காக இங்கு வந்துள்ள இந்த அமைப்பினர், நல்லூர் நாவலர் வீதியில் தமது அலுவலகத்தை நேற்றுத் திறந்துள்ளனர்.

அந்த அலுவலகத்தில் வைத்து தமது அமைப்பின் செயற்பாடுகள் குறித்து சிமொன் போட்டர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு



இலங்கை, இந்தியா, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தியா - இலங்கை இடையே நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை வீரர் மஹேல ஜெயவர்த்தன துடுப்பெடுத்தாடுவதையும் இந்திய விக்கெட் காப்பாளர் ராகுல் ராவிட் அதனை அவதானித்தபடி இருப்பதையும் காணலாம்.

## இங்கிலாந்து அணியில் மீண்டும் டெரன் கொவ்

லண்டன்,ஜூலை2

இங்கிலாந்தில் நடைபெறும் நட்வெஸ்ட் கிண்ணத்திற்கான ஒரு நாள் தொடரில் இன்று இலங்கை - இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன. இப்போட்டிக்கான இங்கிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் டெரன் கொவ் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதியாக கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற நியூஸிலாந்து சுற்றுலாவில் கொவ் பங்குபற்றினார். அதன்பின் வலது முழங்காலில் அறுவைச் சிகிச்சைக்கு உள்ளான கொவ், பல மாதங்களாக போட்டிகளில் பங்குபற்றவில்லை.

எனினும் தற்போது தாம் குணமடைந்துள்ளதாக டெரன் கொவ் அறிவித்துள்ளார். எனவே இன்று நடைபெறவுள்ள போட்டியில் மத்தியூ ஹொகார்ட்டுக்குப் பதிலாக டெரன் கொவ் சேர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நட்வெஸ்ட் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணியின் 3போட்டிகள் மற்றும் வேல்ஸ் அணியுடனான பயிற்சிப்போட்டியின் போது 25.5 ஓவர்கள் பந்து வீசிய ஹொகார்ட் 174 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையே கைப்பற்றினார்.

இதேவேளை ஒருநாள் போட்டிகளில் ஆகக் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்திய இங்கிலாந்து வீரராக டெரன் கொவ் திகழ்கிறார். 106 போட்டிகளில் 168 விக்கெட்டுக்களை கைப் பற்றியுள்ளார் அவர்.

நட்வெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி இலங்கையுடனான போட்டியில் ஒரு போட்டியில் வெற்றிபெற்றுள்ளது. இந்தியாவிடம் தோல்வியுற்றது. (ம)

## கோல்கள் இரண்டும் டாக்டருக்கு சமர்ப்பணம்

### ரொனால்டோ தெரிவிப்பு

லண்டன்,ஜூலை2

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் தான் அடித்த இருகோல்களையும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டாக்டர் குடும்பமொன்றுக்கு அர்ப்பணித்துள்ளார் ரொனால்டோ.

ஜேர்மனிக்கு எதிரான இறுதிப் போட்டியில் 2 கோல்களை அடித்து, 5ஆவது முறையாக பிரேஸில் சம்பியன் பட்டம் வெல்ல வழிவகுத்த இவர் கண்ணீர்மல்க அளித்த பேட்டியில் தனது டாக்டர் குடும்பத்தாருக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த 2 கோல்களையும் தனக்கு மறுவாழ்வு அளித்த டாக்டருக்கும், கஷ்டமான கால கட்டத்தில் ஆதரவளித்த தனது குடும்பத்திற்கும் இவர் அர்ப்பணித்துள்ளார்.

1998இல் நடந்த பிரான்ஸுக்கு எதிரான இறுதிப் போட்டியில் காயம் காரணமாக இவரால் சோபிக்க முடியவில்லை. இதற்குப் பின் வலது மூட்டில் ஏற்பட்ட காயம் இவரை உதைபந்து அரங்கிற்கு முழுக்குப் போடவைக்கும் அளவிற்கு ஆபத்தாக அமைந்தது.



இந்நிலையில் பிரான்ஸைச் சேர்ந்த டாக்டர் ஜெராட் செய்லண்ட் இவரது மூட்டில் வெற்றிகரமாகச் சத்திரசிகிச்சை செய்தார். இவரது சிறப்பான சிகிச்சை காரணமாக மீண்டும் எழுந்து நடக்கத் தொடங்கியபோதும் கடந்த இரண்டரை ஆண்டுகளாக போட்டிகள் எதிலும் பங்கேற்க முடியாமல் தவித்தார் ரொனால்டோ.

இந்த நேரத்தில் இவருக்கு தகுந்த பயிற்சிகளை அளித்த ஜெராட் உலகக் கிண்ணப் போட்டிக்கு ஒரு மாதங்கள் இருக்கும் போது உதைபந்து பயிற்சி மேற்கொள்ளும் அளவிற்கு இவரை முன்னேற்றம் அடையச் செய்தார்.

இவரது சிறப்பான சிகிச்சையே இத்தொடரில் 8 கோல்களை அடித்து ரொனால்டோ தங்கப் பாதணி விருது வெல்லக் காரணம் எனலாம். (ம)

### மேற்கிந்திய வீரர் கிறிஸ் கைல் இரட்டைச் சதம்

நியூஸிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய வீரர் கைல் இரட்டைச் சதம் குவித்தார்.

சென்.ஜோர்ஜ் நகரில் இப்போட்டி நடைபெறுகிறது. கடந்த சனிக்கிழமை ஆட்ட முடிவின்போது மேற்கிந்திய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு, 80 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கிறிஸ் கைல் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

போட்டியின் மூன்றாவது நாளான ஞாயிறன்று கைல் 204 ஓட்டங்களைப் பெற்றார். 332 பந்து வீச்சுகளை எதிர்கொண்ட அவர் 29 பவுண்டரிகளையும், 2 சிக்ஸர்களையும் விளாசினார்.

22 வயதான கிறிஸ் கைல், டெஸ்ட் போட்டிகளில் இரண்டாவது தடவையாக சதம் குவித்துள்ளார். கடந்த வருடம் நடைபெற்ற ஸிம்பாப்வேயுடனான போட்டியில் அவர் 175 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே கிறிஸ் கைலின் முதலாவது டெஸ்ட் சதமாகும்.

ஸ்கோர் விவரம்:-

நியூஸிலாந்து - முதல் இனிங்ஸ் 373/10

மேற்கிந்தியத்தீவுகள் - முதல் இனிங்ஸ் 394/5

# மட்டக்களப்பு நகரங்கள் நேற்று வழமை நிலைக்குத் திரும்பின!

காத்தான்குடி,ஜூலை2

தொடர்ச்சியாக அமுலில் இருந்த ஊரடங்கு நேற்று நீக்கப்பட்டதும் காலைமுதல் மட்டக்களப்பு, காத்தான்குடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தைகளில் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது.

கடந்த ஒரு வாரகாலமாக போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்ததால் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்படும் மரக்கறி, தேங்காய் ஆகியவற்றுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

ஒரு வாரத்தின் பின்னர் நேற்றே கொழும்பு செய்திப் பத்திரிகைகள் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்தன. ஒரு சில நிமிடங்களில் அவை விற்றுத் தீர்ந்துவிட்டன.

ஏறாவூர், காத்தான்குடி, மட்டக்களப்பு நகரங்களில் கடைகள் யாவும் முழுமையாகத் திறக்கப்பட்டிருந்தன. வங்கிகள், அலுவலகங்கள், பாடசாலைகள் வழமைபோன்று இயங்கின. போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெற்றன.

பூரண அமைதி நிலவியபோதிலும் பொலீஸாரும் இராணுவத்தினரும் தொடர்ந்து காத்தான்குடி, ஏறாவூர்ப் பகுதிகளில் காவலில் ஈடுபட்டிருந்தனர். கல்குடா தொகுதியில் ஊரடங்கு தொடர்ந்து அமுலிலிருக்கிறது.

## மரக்கறி கிலோ நூறு ரூபா!

வாழைச்சேனை,ஜூலை2

வாழைச்சேனையில் இடம்பெற்ற ஹர்த்தாலினால் மூடப்பட்ட வர்த்தக நிலையங்களில் சில நேற்றுத் திறக்கப்பட்டு வியாபாரம் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டனர்.

அங்கு மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. விலைகள் கிலோ நூறு ரூபாவுக்கு மேல் உயர்ந்துள்ளன.

மீன்கள் இல்லாததால் ஓட்டமாவடி பொதுச் சந்தை இயங்கவில்லை. இறைச்சிக் கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது.

கிரனேட் வீச்சுக்கு ஆளான வாழைச்சேனையைச் சேர்ந்த ஒருவர் கண்டி வைத்தியசாலையில் காலமானார் என்று அவரது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (ம)

வாழைச்சேனைக் கலவரங்களால் 6முதல் 7கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிந்திருக்கின்றன என்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் எஸ்.புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

மொத்தமாக 90 கடைகள் எரிந்தன;6 வீடுகள் சேதமடைந்தன; 7பேர் பலியாகினர்; சுமார் 70பேர் காயமடைந்தனர் என்று இறுதி மதிப்பீடு தெரிவிப்பதாக அவர் சொன்னார்.

ஒரு மாத காலத்தினுள் நஷ்டஈடு வழங்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ம)

## யாழ்.பிரதம தபாலகத்தில் தந்தி, பக்ஸ் ஊடாக காசுக்கட்டளை சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை2

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் தந்திக் காசுக்கட்டளை சேவை மற்றும் பக்ஸ் காசுக் கட்டளை சேவை என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதம தபாலதிபர் எஸ்.பி. இராஜதுரை தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் யாழ். மாநகர சபைப் பகுதிக்குட்பட்ட வாடிக்கையாளர்களுக்கான காசுக்கட்டளையை உடனுக்குடன் வழங்க முடியும் என்றும் ஏனைய பகுதிகளுக்கான காசுக் கட்டளையை அந்தந்தப் பகுதித் தபாலகங்கள் ஓரிரு தினங்களில் வழங்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பே இந்தப் பக்ஸ் காசுக் கட்டளைச் சேவை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. ஆனால், தற்பொழுதே அது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை மூலம் வாடிக்கையாளர்கள் விரைவாகப் பணத்தை அனுப்பி வைக்கவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

தந்திக் காசுக்கட்டளைச் சேவையானது ரெலிக்கொம் நிறுவனத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தந்திச் சேவைகள் அனைத்தையும் ரெலிக்கொம் நிறுவனமே கையாண்டு வருவதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் - அவர் தெரிவித்துள்ளார். (ம-10)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ். மாவட்டத்தில் உள்ள கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இச்செயலமர்வை பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபயவர்த்தன ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

'சிலிடா' நிறுவனத்தின் இயக்குநர் ரி.எம்.கே.பி. தென்னக்கோனும் இச்செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ளார். (ம-10)

## நிவாரணம் பெறும் நோக்குடன் தனது வீட்டுக்குத் தானே தீ மூட்டிய நபர் கைது!

திருமலை,ஜூலை2

கடந்த வாரம் மூதூரில் இடம்பெற்ற வன்செயல்களால் பாதிப்புக்குள்ளான வீடுகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறிவித்ததையடுத்து நிவாரணம் பெறும் நோக்கில் தனது வீட்டுக்குத் தானே தீ மூட்டிய முஸ்லிம் நபர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மூதூரில் உள்ள ஆலஞ்சேனை என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இவர் தனது வீட்டுக்குத் தீ மூட்டியதை அவதானித்த இராணுவத்தினர் இவரைப்பிடித்து கிராம மக்கள் முன் விசாரித்தபோது உண்மை வெளிவந்தது. குறிப்பிட்ட நபர், தான் வீட்டை எரித்ததற்கு நிவாரணம் பெறும் நோக்கம்தான் காரணம் எனப் படையினரிடம் கூறினார். இதனையடுத்து இந்நபர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-8)



தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன சந்தித்தபோது எடுத்த படம். இந்தியாவுக்கான இலங்கைத் துணைத் தூதர் சேனித் நகாத்தலாவும் உடன் உள்ளார்.

## நாகவிகாரை உண்டியலை உடைத்து பணம் திருட்டு

### மூவர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.நாகவிகாரையில் உள்ள உண்டியலை உடைத்துப் பணத்தைத் திருடியதாகத் தெரிவித்து மூன்று இளைஞர்கள் நேற்றுப் பொலீஸாரால் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் தொடர்பாக இராஜநாயகம் ரஜீகரன், யோகராஜா விஜயதரன், யோகராஜா விஜேந்தன் ஆகிய மூவருமே பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

மூவரையும் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார். (ஜ-10-ரி)

## தரைப்பாதை ஊடாக தபால் பொதிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை2

கடந்த மாதம் 17ஆம்திகதி தொடக்கம் யாழ். குடாநாட்டுக்கான தபால் பொதிகள் யாவும் வவுனியாவில் இருந்து ஏ-9 தரை வழிப்பாதை ஊடாக எடுத்துவரப்படுகின்றன. வான் கடிதங்கள் யாவும் தொடர்ந்தும் விமானம் மூலமே எடுத்துவரப்படுகின்றன என்று யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த பல வருடங்களாக குடாநாட்டுக்கு செஞ்சிலுவைச் சங்கதேசக் குழுவின் கப்பலிலேயே சகல தபால்களும் எடுத்துவரப்பட்டன. 1996ஆம் ஆண்டின் பின்னர் வான் கடிதங்கள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

கடந்த 17ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 352 தபால் பொதிகள் தரை வழிப் பாதையூடாக எடுத்துவரப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-10)

# ஹங்கேரியில் பஸ் கவிழ்ந்து 19 சுற்றுலாப் பயணிகள் பலி!

ஹங்கேரியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் போலந்து சுற்றுலாப் பயணிகள் 19 பேர் உயிரிழந்தனர். மேலும் 32 பேர் இந்த விபத்தில் காயமடைந்தனர்.

பலட்டன் ஏரிப்பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்தது. போலந்து சுற்றுலாப் பயணிகள் பயணித்த இந்தப் பஸ் அதிக வேகத்தில் சென்று வீதித் திருப்பம் ஒன்றில் திரும்பியபோது கவிழ்ந்து உருண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நள்ளிரவு நேரத்தில் பஸ் சாரதி வீதியில் திருப்பம் இருப் பதை சற்றுத் தாமதமாகவே உணர்ந்ததால் திடீரென்று பஸ்ஸை திருப்ப முயற்சித்ததாலேயே பஸ் கவிழ நேரிட்டதாக உயிர் தப்பிய பயணிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-9)

## மகாபோதிக்கு கௌரவம்

இந்தியாவின் பிஹார் மாநிலத்தில் உள்ள மகாபோதி கோயிலை உலகப் பாரம்பரிய இடமாக 'யுனஸ்கோ' பிரகடனப்படுத்தியுள்ளது. மகாபோதி கோயில் புத்தர் ஞானம்பெற்ற இடம் எனக் கருதப்படுகிறது. இக்கோயில் 'யுனஸ்கோ' பட்டியலில் இடம்பெற்றுள்ளமையால் அங்கு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது. (ஒ-9)

# பொஸ்னியா அமைதிப்பணி குறித்த பாதுகாப்புச் சபை தீர்மானம் அமெரிக்க 'வீட்டோ'வால் ரத்து!

லண்டன்,ஜூலை2

பொஸ்னியாவில் ஐநா. மேற்கொண்டுள்ள அமைதிக்காப்பு நடவடிக்கையை நீடிக்கும் ஐநா. பாதுகாப்புச் சபையின் முடிவை அமெரிக்கா தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து விட்டது.

நேற்றுடன் முடிவடையவிருந்த பொஸ்னியாவுக்கான ஐநாவின் அமைதிக்காப்புத் திட்டம் இதனால் 72 மணித்தியாலங்களுக்கு மட்டும் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.



ஐ.நா. பாதுகாப்புச் சபை

பொஸ்னியாவில் தனது அமைதி காக்கும் நடவடிக்கையை காலவரையறையின்றி மேலும் நீடிக்கும் தீர்மானத்தை பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் அமெரிக்காவைத் தவிர மற்றய 14 நாடுகளும் ஆதரித்து வாக்களித்தன.

இதனையடுத்து நிரந்தர உறுப்பு நாடுகளுக்குள்ள விசேட அதிகாரமான 'வீட்டோ'வைப் பயன்படுத்தி அந்தத் தீர்மானத்தை அமெரிக்கா ரத்துச்செய்து விட்டது.

ஐநா. அமைதிகாப்புப் படையில் இடம்பெற்றுள்ள அமெரிக்க இராணுவத்தினர், நேற்றுமுதல் செயற்பட ஆரம்பித்துள்ள உலகப் போர்க் குற்றங்களுக்கான நீதிமன்றத்தில் விசாரணையை எதிர்கொள்ளத் தேவையில்லை என்ற உறுதிமொழி வழங்கப்பட்டால் மேற்படி தீர்மானத்தை அங்கீகரிப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

பொஸ்னியா யுத்தத்தின் பின்னர், பொஸ்னியாவில் அமைதிகாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள ஐநா. படையினர், இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து பொஸ்னிய பொலீஸ் சேவைக்கு ஆள்களைச் சேர்த்து அவர்களுக்கு பயிற்சியளித்து வந்தனர். இந்த நிலையில் அங்கிருந்து ஐநா. படை வெளியேறினால் பொஸ்னியாவில் சட்டம் ஒழுங்குநிலைமை மோசமாகச் சீர்குலைய நேரிடலாம் என அஞ்சப்படுகிறது. (ஒ-9)

# ஹமாஸ் இயக்கத் தளபதியை இஸ்ரேல்படை சுட்டுக்கொன்றது!

லண்டன்,ஜூலை2

பலஸ்தீனத் தீவிரவாத இயக்கமான ஹமாஸின் இராணுவப் பிரிவின் தளபதியான மஹனட் தஹார் என்பவரை சுட்டுக்கொன்று விட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேற்குக்கரை நகரான நப்லஸில் தஹார் தங்கியிருந்த வீட்டை இஸ்ரேலிய இராணுவ அதிரடிப் படையினர் சுற்றிவளைத்ததாகவும் -

அப்போது தஹாரும் அவரது சகாக்களும் வீட்டுக்குள்ளிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் -

அப்போது இடம்பெற்ற சமரில் தஹாரும் அவரது சகாவும் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் -

இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.

ஆனால், இதை மறுத்த பலஸ்தீன வட்டாரங்கள், தஹார் மட்டுமே இஸ்ரேலியப் படைகளின் குறியாக இருந்தபோதும் அவருடன் இருந்த அப்பாவிப் பலஸ்தீனர் ஒருவரையும் சுட்டுக் கொன்று விட்டதாக குற்றஞ்சாட்டின.

இஸ்ரேலில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு மொகன்னட் தஹார்தான் சூத்திரதாரி என்று இஸ்ரேல் கூறி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



மேற்குக் கரைப் பகுதியில் பலஸ்தீனப் பெண்களின் அடையாள ஆவணங்களை இஸ்ரேலிய படைவீரர் ஒருவர் பரிசோதிப்பதை படத்தில் காணலாம்.

# இஸ்ரேலிய ரயில்கள் மீது பலஸ்தீனத் தீவிரவாதிகள் குறி!

ஜெருசலேம்,ஜூலை2

இஸ்ரேலில் ரயில் பாதைகளில் குண்டுவைத்துத் தாக்குதல் நடத்தும் நடவடிக்கைகளில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் முதல்முறையாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

"லோர்டு" நகர ரயில் நிலையம் அருகே புகையிரதப் பாதையில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் வைத்ததாகக் கூறப்படும் வெடிகுண்டு அந்த இடத்தைப் பயணிகள் ரயில் ஒன்று கடக்கும் போது வெடித்ததில் 3 பயணிகள் காயமடைந்துள்ளனர். ரயில் பெட்டிகள் சிலவும் இக்குண்டு வெடிப்பில் சேதமடைந்தன.

இதுவரையிலும் இஸ்ரேலில் பஸ்களிலும், பொது இடங்களிலும் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை நடத்தி உயிர் மற்றும் உடைமைகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்தி வந்த பலஸ்தீனியத் தீவிரவாதிகள், தற்போது முதல்முறையாக ரயில்களைக் குறிவைத்துத் தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# பாடசாலை உணவகத்தில் சாப்பிட்ட 350 சிறுவர்கள் ஆஸ்பத்திரியில்!

## பிலிப்பைன்ஸில் சம்பவம்

மணிலா,ஜூலை2

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில பாடசாலை ஒன்றில் உள்ள சிறுண்டிச் சாலையில் உணவருந்திய 350 சிறுவர்கள் வயிற்றுவலியால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட பாடசாலையின் சிறுண்டிச் சாலையில சுமார் 350 மாணவர்கள் உணவு அருந்தியதாகவும்-

அவர்கள் 'சான்விச்', முட்டை, பால் என்பவற்றை உட்கொண்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அந்த உணவு வகைகள் பழுதடைந்து நஞ்சாகியிருந்ததால் மாணவர்களுக்கு வயிற்றுவலி ஏற்பட்டதுடன வாந்தி மற்றும் மயக்கமும் ஏற்பட்டன. உடனடியாக அச்சிறுவர்கள் அனைவரும் மணிலாவிலுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இச்சிறுவர்கள் அனைவரும் 7 முதல் 12 வயதுக்குட்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவத்தையடுத்து சுகாதாரம் குறித்த கண்காணிப்பு நடவடிக்கைகளை பாடசாலைச் சிற்றுண்டிச் சாலைகளிலும் மேற்கொள்வது குறித்து பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். (ஒ-9)

# வன்முறைகளைத் தூண்டுவோர் தேர்தலில் போட்டியிடத் தடை!

## பாக். அரசு நடவடிக்கை

இஸ்லாமாபாத்,ஜூலை2

பாகிஸ்தானில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பங்குபற்றுவதற்கு வன்முறைகளைத் தூண்டும் அரசியல் கட்சிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அரசியல் சட்டம் ஒன்று அங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன, மதவாதங்களைத் தூண்டிவிடும் கட்சிகளும் பிரிவினைவாதக் கடசிகளும் இச்சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளன.

கட்சிக் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதற்கும் தேர்தல் பிரசாரம் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு அரசியல்கட்சிகள் வெளிநாடுகளில் இருந்து நிதி பெறுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிட வேண்டுமானால் அரசியற் கட்சி ஓகஸ்ட் 5ஆம் திகதிக்குள் உட்கட்சித் தேர்தல்களை நடத்தவேண்டும் என்றும் -

அப்போதுதான் தேர்தலில் போட்டியிடும் தகுதி அக்கட்சிக்குக் கிடைக்கும் எனவும் - பாகிஸ்தானிய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் -

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திற்குள் ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்தி முடிக்கப்போவதாக பாகிஸ்தானிய அதிபர் முஷாரப் உறுதியளித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் பதவியை நானே வைத்துக் கொள்வேன். எனக்கு எந்த அரசியல் நோக்கமும் ஆசையும் கிடையாது. எனவே அந்தப் பதவிக்கு நானே தகுதியுள்ளவன் என அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# 'தெஹல்கா' விவகாரத்தில் அந்நிய சக்திக்கு பங்குண்டு!

## இந்திய அதிகாரிகள் தெரிவிப்பு

புதுடில்லி,ஜூலை2

பல மாதங்களின் முன்னர் இந்திய அரசியலில் பெரும்பரபரப்பை ஏற்படுத்திய ஆயுத பேர ஊழல் தொடர்பான 'தெஹல்கா' இணையத்தளச் செய்தியின் பின்னணியில் அந்நிய சக்திகளின் சதி இருந்ததை கண்டுபிடித்துள்ளதாக இந்திய அமுலாக்கல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய இராணுவத்துக்கு ஆயுதங்களை விற்பவர்களாக நடித்த சிலரிடமிருந்து ஆளும் தேசிய ஜனநாயக முன்னணியின் முக்கிய தலைவர்கள் சிலர் லஞ்சம் பெற்றதை அவர்களுக்குத் தெரியாமல் படம் பிடித்து 'தெஹல்கா' இணையத்தள செய்தி நிறுவனம் வெளியிட்டிருந்தது. இந்தியாவில் ஆயுத பேரத்தின்போது ஊழல் நடைபெறும் சாத்தியங்களை வெளிக்காட்டவே தமது ஊழியர்கள் சிலரை ஆயுத முகவர்கள் போல் நடிக்க வைத்து அவர்கள் மூலம் தலைவர்கள் சிலருக்கு லஞ்சம் வழங்கியதாக 'தெஹல்கா' நிறுவனம் அப்போது தெரிவித்திருந்தது. இந்த விவகாரம் கிளப்பிய சர்ச்சைகளையடுத்து பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலக வேண்டியும் நேரிட்டது.

மேற்படி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த வெங்கடசாமி தனிநபர் ஆணைக்குழுவை மத்திய அரசு நியமித்திருந்தது.

இந்த ஆணைக்குழுவிடம் அமுலாக்கப் பிரிவினர் சமர்ப்பித்த 14 பக்க அறிக்கையிலேயே 'தெஹல்கா' விவகாரத்தில் வெளிநாட்டு சக்திகள் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தெஹல்கா' நிறுவனத்தில் 10 சதவீதப் பங்குகளை உடைய சங்கா சர்மாவிடமும், இந்தித் திரைப்படத் துறையில் சம்பந்தப்பட்டுள்ள அஹமட சம்சுதீன் என்பவரிடமும் நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து ஆயுத பேர ஊழல் தொடர்பான செய்தியை உருவாக்கி வெளியிடத் தேவையான பணம் முழுவதும் வெளிநாட்டிலிருந்தே வழங்கப்பட்டமை தெரிய வந்துள்ளதாக தமது அறிக்கையில் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சதியில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு சக்தி எது என்பது குறித்து அறிக்கையில் அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

இந்திய அரசியலில் குழப்ப நிலையை ஏற்படுத்தவும் -

அதன் மூலம் இந்திய நிறுவனப் பங்குகளின் விலைகளைக் குறைய வைத்து பொருளாதார தேக்க நிலையை உருவாக்கவும் -

'தெஹல்கா' ஆயுத பேர ஊழல் செய்தி உருவாக்கப்பட்டிருக்கக் கூடும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

'தெஹல்கா' ஆயுத பேர ஊழல செய்தியைப் பயன்படுத்தி சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியினர் ஆளும் பாரதிய ஜனதா கூட்டணி அரசுக்கு அதிலும் குறிப்பாக ஜோர்ஜ் பெர்னாண்டஸுக்கு நெருக்கடியை ஏற்படுத்த முயற்சித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9

# உடல் பருத்தவர்களுக்கு விமானத்தில் 2 டிக்கெட்டுகள்

## அமெரிக்க விமான நிறுவனம் அறிவிப்பு

நியுயோர்க், ஜூலை2

உடல்பருத்தவர்கள் விமானத்தில் பயணஞ்செய்ய வேண்டுமானால் 2 பயணச்சீட்டுக்களை வாங்க வேண்டுமென்று அமெரிக்க விமான நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த உடல் பருமனுடைய பெண்கள் இருவர் கலிபோர்னியாவில் இருந்து லொஸ்வேகாஸ் நகருக்குச் செல்வதற்காக ஆளுக்கொரு பயணச்சீட்டினை பெற்றுக் கொண்டனர். எனினும் அவர்களுக்கு விமான இருக்கை போதுமானதாக இருக்கவில்லை. இதனால் அவர்கள் இருவரையும் மேலும் இரண்டு பயணச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளுமாறு விமான நிறுவன அதிகாரிகள் வற்புறுத்தினர். அதனை ஏற்க மறுத்த அப்பெண்கள், 'தேவையானால் மேலும் ஒரு டிக்கெற்றை வாங்கிக் கொள்கிறோம்' எனக் கூறிவிட்டனர்.

இதனைத் தொடர்ந்தே உடல் பருத்தவர்கள் இரண்டு பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மேற்படி விமான நிறுவன நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-9)

# தங்கச் சுரங்க விபத்தில் 46 பேர் உயிரிழந்தனர்!

## வட சீனாவில் அனர்த்தம்

பெய்ஜிங்,ஜூலை2

சீனாவின் வடக்குப் பகுதியில் இன்ஷி மாகாணத்தில் உள்ள பான்ஷி கிராமத்தில் தங்கச் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 46 பேர் உயிரிழந்தனர்.

பாறைகளைத் தகர்க்கப் பயன்படுத்தும் வெடிபொருள்கள் பெருமளவில் சுரங்கத்துக்குள் வைக்கப்பட்டிருந்ததாகவும் -

அங்கு மூண்ட தீ வெடிமருந்துகள் இருந்த பகுதிக்கும் பரவியதில் வெடித்து சிதறியதாகவும் - கூறப்படுகிறது. இதிலேயே 46 பேர் கொல்லப்பட்டனர்.

தீ மூண்டபோதும் தொடர்ந்து பணியில் ஈடுபடுமாறு மேலதிகாரிகளால் தொழிலாளர்கள் வற்புறுத்தப்பட்டதனாலேயே உயிரிழப்புக்கள் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரமும் சீனாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஹெலான் ஜிஜியாங் மாகாணத்தில் ஏற்பட்ட நிலங்கிரிச் சுரங்க விபத்தில் 115 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# சின்னஞ்சிறு வி[illegible]ரம்

## விற்பனைக்கு

ஆபிரிக்க லவ்பேட்ஸ், ஜாவாப் பரட், விஞ்சேஸ் குருவிகள், பல இனங்களில் கலர் மீன்கள், மீன்தொட்டிகள், மோட்டார்கள், மீன்தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (5293)

FD125 (G.S மொடல்), CUB90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. (கொழும்பிலிருந்து தருவிக்கப்பெற்றவை) தொடர்பு: கேசவன், பாலமுரளி, மஞ்சத்தடி, இணுவில். (5416)

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட 5K.V KUBOTA JAPAN டைனமோவுடன் கூடிய புதிய KUBOTA RX-125 JAPAN டீசல் ஜெனரேற்றர் (R.P.M.-2200) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 320,பலாலி வீதி, ஆலடிச்சந்தி, கந்தர்மடம். (5399)

மாவடிச் சந்திக்கு அருகில் மூளாய் வீதியில் 6 பரப்பு வளவும் வீடும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: Dr.சபாரத்தினம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (5451)

## தவறிவிட்டது

மதி இன்பராசன் அன்னைநேசன் ஆகிய எனது திருகோணமலை மாவட்ட விசேட அ.அ. 27-06-02 அன்று யாழ். நகர பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 33, சீனிவாசம் வீதி, கொட்டடி என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். (5440)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 34 பொறியியலாளர், உயரம் 5 அடி, 4அங்குலம், நட்சத்திரம்-பரணி தற்போது கொழும்பில் தொழில் புரிகின்றவருக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.15551, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5449)

## குப்பைகூடைகள் அன்பளிப்பு

மந்திகை ஆஸ்பத்திரியிலுள்ள அனைத்துப் பிரிவுகளுக்கும் 'எம்.எஸ்.எவ்' நிறுவத்தினர் பிளாஸ்ரிக் குப்பைக் கூடைகளை வழங்கியுள்ளனர். இந்தக் கூடைகளில் சேகரிக்கப்படும் கழிவுகள் ஆஸ்பத்தியில் பொருத்தப்பட்டுள்ள குப்பை எரிக்கும் இயந்திரம் மூலம் எரிக்கப்பட்டுவருகிறது. (ஒ-117)

## தெங்கு செய்கையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை2

வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கத்தினர் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்றுறையினரை அரசியல் பணியகத்தில் சந்திக்க உள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் முக்கியமான பல விடயங்கள் குறித்து பேசப்படவுள்ளதால் சங்க உறுப்பினர்கள் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## அடையாள அட்டைகள் எடுத்து வரப்பட்டன

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகளில் ஒரு தொகுதி கொழும்பில் இருந்து யாழ்.செயலகத்தின் அடையாள அட்டைகள் அலுவலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. எடுத்து வரப்பட்டுள்ள சுமார் 300 அ.அட்டைகளும் தரம் பிரிக்கப்பட்டு உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)

## இரண்டாவது வருட அஞ்சலி

மலர்வு 23 - 01 - 1945



உதிர்வு 25 - 06 - 2000

**அமரர் தம்பி சிவேஸ்வரதம்பி (வரதன்)**

*(விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி, கச்சேரி - யாழ்ப்பாணம்)*

***திதி: ஆனி மாத அபூர்வபக்க அட்டமி (03.07.2002)***

**எமது அன்புத் தெய்வத்தின் 2ஆவது வருட நிறைவில் அவரை நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கின்றோம்.**

*"லதாபவனம்"*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

அன்னாரின் பிரிவால் துயருறும்:
திருமதி சி.லதாராணியும்
குடும்பத்தினரும். (5453)

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உப விடுதிக் காப்பாளர் (ஆண், பெண்)**

* க.பொ.த.(சா/த) வுக்குக் குறையாத கல்வித்தகைமை
* வயதெல்லை 30 ~ 60
* விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்
* இல்லப்பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், கலாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுதலிலும் அர்ப்பணிப்போடு ஈடுபட வேண்டும்.

**சமையலாள்**

தேகாரோக்கியமும், சுறுசுறுப்பும், பெருமளவில் சமையல் செய்த அனுபவமும் அத்தியாவசியம்.

வயதெல்லை 35 ~ 55

இல்லத்தில் தங்கக்கூடியவர் முன்னுரிமை பெறுவர்.

* எல்லாப் பதவிகளுக்கும் தொண்டுதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.
* விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் 12.07.2002.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.


(C-22759)

சோ.பத்மநாதன்,
செயலாளர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 - 03 - 1918



மறைவு 03 - 06 - 2002

## அமரர் நா.நாகேந்திரன்

*(இளைப்பாறிய கட்டடப்பகுதி மேசன், புகையிரதத் திணைக்களம்)*

*எங்கள் பாசமிகு பப்பாவே!*
*அன்னையை இழந்த எங்களை*
*கண்ணை இமை காத்ததுபோலக் காத்த எங்கள் குலதெய்வமே!*
*எங்களின் கல்விச் செல்வத்திற்கு வித்திட்ட வித்தகனே!*
*உங்களதும் அன்னையினதும் கல்வி என்கோணத்தில் தெறிக்க*
*ஏடேற்றிய கண்ணாடி அரியப் பிழம்பே – செம்மலே*
*அன்னையுடன் அமர்ந்திருந்து எங்கள் துயர் ஆற*
*அம்மையையும் அப்பனையும் நீராழி மலர் தூவித் தொழுது வணங்குகிறோம்.*
*உங்கள் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களை வைத்து வணங்குகின்றோம்.*
*ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!*

நாளை (03.07.2002) புதன்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றி ஏகுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*திருமதி*
*சரோஜினிதேவி செல்வநாயகம்,*
*அரசடி வீதி,*
*நவாலி தெற்கு, நவாலி.* (5432)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


LAMiCO

லெமினேடிங் முறைகளை
தெரிவு செய்யுமுன் எங்களின்
விலைகளை கவனியுங்கள்



புகைப்படங்களுக்கு 100% விகிதம் பாதுகாப்பு

- ஒரு பொத்தானை அழுத்தியவுடன் தானாய் வெப்பத்தை படச்சுருளின் வேகத்துக்கேற்றவாறு அமைத்துத் தரும்.
- 6 சூடாக்கப்பட்ட சிலிகோண் ரப்பர் ரோல்களின் மூலம் தரத்துக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதம்.
- எழுத்துப் படிவங்களை திருப்பிப்போடும் சலுகை
- வேகத்தை கையினால் இயக்கக்கூடியது. மற்றும் காகிதத்தின் கனத்தை கூட்டும் குறைக்கும் கருவியும் உண்டு.

உங்களின் பாதுகாப்புகளுக்கு
உலக முன்னோடியுடன் இணையுங்கள்

நெஷானிஸ் (பிரைவேட்) லிமிட்டட்
25 1/1, கிருள வீதி கொழும்பு-05. தொ. பேசி. 590695, 502149, 074-511191
(தே. சே. வங்கியின் அருகில்) நாரஹேன்பிட்டி
வெப் தொடர்பு: http://www.bcity.com/neshanys






மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாளைச்சாறு,
கொகும்பட்டர், கிளிசரின் அடங்கிய வாசனை சோப்.
சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

சந்தைப்படுத்துவோர் PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

Raj Advertising

உதயன்

## உண்மைகள்

மக்களால் தெரிவுசெய்யப்பட்டு ஆட்சியில் இருக கும் அரசு, கொலை உட்பட தண்டனைக்குரிய எந்தக் குற்றத்தைச் செய்தாலும் எவரும் அதைக கண்டுகொள்வதுமில்லை; பெரிதுபடுத்துவதும் இல்லை.

காரணம் சட்டம், ஒழுங்கு, அமைதி, பாது காப்பு என்ற மந்திர வார்த்தைகளைக் கவசமாக வைத்துக் கொண்டே அரசு அந்தச் செயல்களைப் புரிகிறது.

உதாரணமாக வணக்கத்தலங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் அரசாங்கம் குண்டுமாரி பொழிந்து பலரின் உயிர் இழப்புக்குக் காரணமாக இருந்தாலும்கூட அதைப் பலரும் பொருட்படுத்துவதில்லை.

வேறு எவராவது அதைச் செய்தால் அது பயங்கரவாதச் செயல் என்பார்கள்.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் - தேசத் துரோகிகள் - இருந்தார்கள் என்ற சந தேகத்தின் பேரிலேயே அரசு வணக்கத்தலம் என் றும் பாராமல் அவற்றின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியது என்று காரணம் கூறுவதோடு கொலைக் குற்றம் நியாயப்படுத்தப்பட்டுவிடுகிறது; சரியாகிவிடுகிறது.

ஆனால் இந்த நிலைமையைக்கூட ஒப்புக் கொள்ளாத ஓர் அமைப்பு இருக்கிறது என்றால் அது 'அம்னஸ்ரி இன்டர் நஷனல்' என்ற சர்வ தேச மன்னிப்புச் சபைதான்.

உலகின் எந்த மூலையில் எவர் மனித உரிமை மீறல் சம்பவத்தில் ஈடுபட்டாலும் அதை வெளிப் படுத்தி சம்பந்தப்பட்டவரை வெளுத்துவாங்கி விடும் சர்வதேச மன்னிப்புச் சபை.

இந்தச் சபை இலங்கையின் முன்னைய அரசு களை அநியாயக் கைதுகள், கைதிகளை விசார ணையின்றி அதிக காலம் சிறையில் அடைத்து வைத்தல், சித்திரவதை செய்தல், ஆள்களைக் கடத்துதல், இரண்டாம் பேருக்குத் தெரியாமல் கொலை செய்தல் போன்ற பல்வேறு மனித உரிமை மீறல்களுக்காக வன்மையாகக் கண்டித்து வந்தது.

அப்படியே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தையும் சர்வதேச மன்னிப்புச் சபை 18 வயதுக் குக் குறைந்த சிறுவர்களைப் படையில் சேர்த்துக கொள்வது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக் களைக் கூறி அவற்றுக்காக வன்மையாகக் கண் டித்து வந்தது.

தமிழினத்துக்கான விடுதலைப் போராட்டத்தை யும் புலிகளையும் விரும்பாதவர்களும் புலிகளை எதிர்ப்பவர்களும் சர்வதேச மன்னிப்புச் சபை புலிகள் மீது தெரிவித்த கண்டனங்களைத் தமக் குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

லண்டனில் தலைமையகத்தைக் கொண் டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதி நிதிகள் குழு ஒன்று சமீபத்தில் இலங்கை வந்து இருவாரகாலம் தங்கியிருந்து நிலைமை களை நேரில் அவதானித்தது; அரசினரையும் புலிகளை யும் மற்றும் முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசியது.

அரசும் புலிகளும் செய்துகொண்டுள்ள புரிந்து ணர்வு உடன்படிக்கைக்குப் பிறகு இலங்கையின் மனித உரிமை பேணப்படும் நிலை மிகவும் முன் னேற்றம் அடைந்திருக்கிறது என்று குழு திருப்தி தெரிவித்திருக்கிறது.

புலிகள் இப்போது சிறுவர்களை படையில் சேர்த் துக்கொள்வதில்லை என்பதை நேரில் அறிந்திருக் கிறது. ஆயினும் 26 சிறுவர்கள் பற்றிய புகாரை விசாரணை செய்ய புலிகள் முன்வந்திருப்பதைக் குழு வரவேற்றிருக்கிறது.

புலிகள் யுத்தக் கைதிகளைத் தடுத்து வைத் திருக்கும் இடங்களுக்கும் குழுவினர் சென்று நிலை மைகளைப் பார்வையிட்டார்கள். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுடன் பேசினார்கள்.

தூர இருந்தபோது விகாரமாகத் தெரிந்தவை எல்லாம் நெருங்கிவந்து உற்றுப் பார்த்தபோது உண்மைத் தோற்றத்தில் தெரியவே குழுவினர் அசந்துவிட்டனர்.

புலிகளும் ஒளிக்க ஏதும் இல்லாமல் எல்லாவற றையும் நேரில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று விட்டதும் குழுவினர் தாம் நினைத்தது என்ன? இங்கு உண்மையில் நடப்பது என்ன? என்பதைத தெளிவாகத் தெரிந்துகொண்டு திருப்தியடைந் தார்கள்.

இங்குள்ளவர்கள் சதா அருகில் இருந்தும் உண மையைக் கண்டுகொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்களே, அதுதான் விந்தை!

## மோட்டார் சைக்கிள் பயணிகள் 'ஹெல்மெட்' அணிவது அவசியம்

### பொலீஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் சமாந்தரமாக வீதிகளில் செல்வோர் மீதும் மோட்டார் சைக்கிள்களில் தலைக் கவசம் அணியாமல் செல்வோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக் கப்படும்.

இந்த நடவடிக்கைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப் படுவதாக யாழ்.போக்குவரத்துக் கண்காணிப்பு பொலீஸ் அத்தி யட்சகர் ஐ.பி.பெரேரா தெரிவித்தார்.

சமாந்தரமாக சைக்கிள்களில் செல்பவர்களால் விபத்துக்கள் அதிகரித்து உயிரிழப்புகள் இடம்பெற்றுவருகின்றன. இதனைத் தடுக்கும் முகமாகவே இத்தகையவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் -

முன்னைய காலங்களில் குடாநாட்டில் தலைக்கவசங்களை பெற்றுக்கொள்வது கடினமாக இருந்த காரணத்தினால் இதுவரை மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் தலைக்கவசம் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும் என்ற விதியை நடைமுறைப்படுத்தாது இருந்ததாகவும் -

தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து குடாநாட் டில் தலைக்கவசங்கள் தாராளமாக விற்பனை செய்யப்பட்டு வருவதனால் தலைக் கவசம் அணியாதவர்களுக்கு எந்தவித மன்னிப்பும் வழங்கமுடியாது என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-ரி)

## விமானப்படைத் தளபதிக்கு நீதிமன்றத்தில் ஆஜராக ஆணை

கொழும்பு,ஜூலை2

இலங்கை விமானப்படையின் தளபதி மதுபோதையில் வாக னத்தை ஓட்டிச்சென்று ஒருவரை மோதி படுகாயப்படுத்திய சம்பவத்துக்காக அவர் பதவி விலகவேண்டும் அல்லது நீதிமன் றின் முன் ஆஜராக வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு அறி வித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த மாதம் விமானப்படைத் தளபதி எயார்மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி தனது சொகுசு வாகனத்தை மதுபோதையில் ஓட்டிச் சென்றதாகவும் -

அப்போது அந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து விபத் துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்ததாகவும் -

எனினும் இவர் தான் தப்புவதற்காக விபத்து நடந்த சம யத்தில் வாகனத்தை தனது வாகனச் சாரதியே செலுத்திச் சென்றதாகக் கூறி அவர் மீது பழியைச் சுமத்தியதாக விசார ணையில் தெரியவந்தது.

அவர் பதவியில் இருந்து விலகவேண்டும் அல்லது சட்டப் படி நீதிமன்றின் முன் 'ஆஜராகி விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-6-9)

### 'தொலைந்த நகை கிடைத்தது'

## தென்மராட்சி மாணவியின் நேர்மைக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை2

தென்பகுதியிலிருந்து வந்திருந்த ஒருவரால் தவறவிடப் பட்ட பெறுமதி வாய்ந்த தங்கநகை தென்மராட்சிப் பாடசாலை யைச் சேர்ந்த 5ஆம் வகுப்பு மாணவி ஒருவரால் கண்டெடுக் கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

களுத்துறை தொடங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 30பேர் அடங்கிய குழு கடந்த வாரம் குடாநாட்டுக்குச் சுற்றுலா மேற கொண்டது. அக்குழுவினர் தமது சுற்றுலாவை முடித்துக்கொண்டு திரும்பிய வழியில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத் தில் ஓரிரவு தங்க நேரிட்டது. மறுநாள் அதிகாலையில் அவர்கள் தென்பகுதி நோக்கிப் பயணித்தனர்.

அன்று காலை பாடசாலைக்கு வந்த இராஜலிங்கம் அனுஜா என்ற 5ஆம் வகுப்பு மாணவி, தனது வகுப்பறையில் பென்ரனு டன் கூடிய தங்கச் சங்கிலியொன்றை கண்டெடுத்தார். அதனை உடனடியாக அதிபரிடம் அந்த மாணவி ஒப்படைத்தார். அந்த நகை தென்னிலங்கைப் பயணிகள் தவறவிட்டுச் சென்ற நகை என்பது தெரிய வந்ததையடுத்து பொலீஸார்மூலம் அதனை அதிபர் உரியவரிடம் ஒப்படைத்தார்.

நகையைக் கண்டெடுத்து அதிபரிடம் கொடுத்த மாணவியின நேர்மையான குணத்தை அனைவரும் பாராட்டினர். (ஒ-9)

## இலங்கையில் அமைதி வந்தால் தமிழக மக்கள் மகிழ்வர்

### இப்படிக் கூறுகிறார் கருணாநிதி

இலங்கையில் விரைவில் அமைதி திரும்பினால் தமிழக மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள்!

இவ்வாறு தெரிவித்துள்ளார் தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி.

இந்தியா சென்றுள்ள அகதிகள் மறுவாழ்வு மற்றும் புனரமைப் புத்துறை அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவை நேற்று முன்தினம் சென்னையிலுள்ள தனது வீட்டில் சந்தித்துப் பேசிய கருணாநிதி, பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் அமைதியை ஏற் படுத்த நடைபெற்றுவரும் முயற சிகள் குறித்து திருப்தியடைந் துளளேன். தமிழக மீனவர்கள் தவறுதலாக கடல் எல்லையைத தாண்டினால் அவர்களைக் கொல்கின்ற அளவுக்குப் போகா மல் கைதுசெய்து விசாரணை நடத்திவிடுவிக்கவேண்டும் என்று இலங்கை அமைச்சரி டம் கோரினேன் என்றார். (ஒ)

**நாளை**

ஆனி 19
புதன்கிழமை
(03.07.2002)
திதி : அட்டமி
நண்பகல் 12.01 வரை.
நட்சத்திரம்: ரேவதி
பிற்பகல் 1.45 வரை.
மரண யோகம்
சுபநேரம் : 4.27 - 5.57
ராகுகாலம் : 11.57 - 1.27
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

வெறும் உழைப்பு மட்டுமே பூரண வெற்றியைத் தந்து விடாது.




## புலிகள் யுத்தப் பிரியர்கள் அல்லர் அவர்கள் அமைதியையே விரும்புகின்றனர்

### சர்வமதக் குழு பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

விடுதலைப் புலிகள் யுத்தப் பிரியர்கள் அல்லர். அவர்கள் நிரந்தர சமாதானத்தையே விரும்புகின்றனர்.

தென்பகுதியிலிருந்து சமாதான நடவடிக்கைக்கான முயற்சி களை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த சர்வசமய சமாதானக் குழுவின் அங்கத்தவரான இந்துப் பிரதி நிதி கடம்ப கணநாதசுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடை பெற்ற 'கரை தேடும் ஓடங்கள்' நாடக விமர்சனத்தின் பின்னர் அவர் 'உதயன்' செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

தென்பகுதியிலிருந்து சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத் தோடு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வருகைதந்துள்ள இக் குழுவினர் இங்குள்ள மக்களின் அபிலாஷைகளையும், சமாதா னத்தின் மீது கொண்டுள்ள பற்றுறுதிகளையும் அறிந்து கொண்ட துடன் விடுதலைப் புலிகளின் சமாதான இலக்கையும் அறிந்து கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளுடன் ஒன்றிணைந்து சமா தானத்தை ஏற்படுத்துவதற்காக போராடுவோம்.

தென்பகுதியில் உள்ள மக்களும் சிங்கள, முஸ்லிம் சகோ தரர்களும் இக்கொடிய யுத்தத்தை விரும்பவில்லை. அவர்களும் உயிரிழப்பை தடுக்கக்கூடிய சமாதானத்தை விரும்புகின்றனர்.

எனவே, அத்தகைய தென்பகுதி மக்களிடமும் அரசியல் வாதிகளிடமும், யுத்த இனவெறி பிடித்தவர்களிடமும் யாழ்மக் கள் கேட்டுக்கொண்ட விடயங்களை எடுத்துக்கூறி சமாதானத்தை ஏற்பட விளைநதே தீருவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சமாதான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு கடந்த சனி யன்று யாழ்ப்பாணம் வந்த மேற்படி குழுவில் சர்வசமய சமா தானக் குழுத் தலைவர் சங்கைக்குரிய மாகம்பாகம அஸ்ஸஜி நாயகதேரர் உட்பட 46 பேர் அடங்கியுள்ளனர். இக்குழுவில் சமாதானத்தை வலியுறுத்தும் 'பாலம்' என்னும் தெருக்கூத்துக் கலைஞர்களும் இடம்பெற்றிருந்தனர். (எ-ரி)

## வடக்கு – கிழக்கின் எல்லைகளில் உள்ள படையினரை அகற்றக்கூடாது!

### சிங்கள எம்.பிக்கள் குழு கோரிக்கை

கொழும்பு,ஜூலை2

'வடக்கு - கிழக்கு மாகாணத்தின எல்லைப் புறக்கிராமங்களில நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து வெளி யேற்றக்கூடாது.

- இவ்வாறு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு கோரியுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை, கடிதம்மூலம் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கடிதத்தில்:-

எல்லைக் கிராமங்களில் இருந்து இராணுவத்தினரை மீளப் பெற்றுக் கொண்டால் எல்லைப் பகுதியில் வாழும் சிங்கள மக்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும். எனவே படை யினரை அங்கிருந்து வெளியேற்றக்கூடாது - என்றுள்ளது.

இதேசமயம் - எல்லைப்புறங்களில் வாழும் சிங்கள மக்க ளுக்கு அரசு தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனாவும் அரசிடம் கோரியுள்ளார். (ஒ-6-9)

## டெங்குக் காய்ச்சலைத் தடுக்க வன்னிப் பகுதியில் நடவடிக்கை

தென்னிலங்கையில் வேகமாகப் பரவிவரும் டெங்குக் காய்ச சல் வன்னிப் பிரதேசத்திலும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கை கள் முன்கூட்டியே முடுக்கிவிடப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் சுமுகமான நிலைதோன்றியிருப்பதைத் தொடர்ந்து தென்பகுதி மக்கள் வடபகுதிக்கு அதிக எண்ணிக்கை யில் வரத்தொடங்கியுள்ளனர். இந்நிலையில் அவர்கள் மூலம் டெங்குக்காய்ச்சல் வட பகுதிக்கும் பரவக்கூடும் என்று சுகா தார அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

அவ்வாறு இந்தக் காய்ச்சல் வன்னிப்பிரதேசத்தில் பரவாமல் தடுக்கும் நோக்குடன் சிரமதானப் பணிகளும், டெங்குக் காய்ச்சலின தாக்கம் தொடர்பான விழிப்புணர்வும் பொதுமக்களுக்கு வழங் கப்படுகின்றன.

முதற்கட்டமாக சாரணர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் மல்லாவி சுகாதார பரிசோதகரின் நெறிப்படுத்தலின் கீழ் மல் லாவி வைத்தியசாலை வளாகத்தை சிரமதானம்மூலம் துப்புரவு செய்துள்ளனர். (ஒ-6)

## அரச மற்றும் பொதுத்துறை ஊழியர்களின் தொகை மதிப்பு

நல்லூர், ஜூலை2

அரச மற்றும் பொதுத்துறை சார்ந்த நிறுவன ஊழியர்களின் தொகை மதிப்பு புள்ளி விவரத் திணைக்களத்தினால் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான படிவங்கள் மத்திய அரசதுறையைச் சேர்ந்த ஊழியர்கள், மாகாண அமைச்சைச் சேர்ந்த ஊழியர்கள் மற்றும் கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட முறையான சபைகள், அரச, தனியார் சபைகளில் பணி புரியும் ஊழியர்கள் அனைவருக்கும அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பூர்த்திசெய்யப்பட்ட படிவங்கள் அனைத்தையும் தத்தமது திணைக் கள, நிறுவன தலைவர்களிடம் கையளிக்க வேண்டும் என்றும் கேட் கப்பட்டுள்ளது. (ஒ-100)

## மின்சார பாவனையாளர் கோரிக்கை

அச்சுவேலி,ஜூலை2

அச்சுவேலி தெற்கு பயித்தோலை - நாவற்காடு வீதியில் உள்ள மின் சாரப் பாவனையாளர்களுக்கு உரிய ஒழுங்குமுறையில் சீரான மின்விநியோ கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு பாவனையாளர்கள் மின்சார சபை யிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

அச்சுவேலிதெற்கு பயித்தோலை - நாவற்காடு வீதியில் பயித்தோலைச் சந்திக்கு அருகில் இருந்து ஆரம் பிக்கும் ஒரு வழி மின் விநியோக இணைப்பு மூலம் 4 கிலோ மீற்றர் களுக்கு மேற்பட்ட தூரத்தில் 65இற் கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒருவழி மின் விநியோக இணைப்பை மாற்றி அமைத்து சீரான மின்சார விநியோகம் செய் வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மின்சாரசபையிடம் கோரப்பட் டுள்ளது. (ஒ-11)

## ஊனமுற்றோருக்கு உதவித் திட்டம்

ஊனமுற்றவர்களின் குடியிருப்பு பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக, சமூக நலன்புரி அமைச்சின்கீழ் இயங் கும் ஊனமுற்றவர்களுக்கான தேசிய சபை வீடமைப்பு உதவிகளுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய தங்குமிட வசதியில் லாத ஊனமுற்றவர்களுக்கு சிறிய வீடு ஒன்றை அமைத்துக்கொள்ள 50 ஆயிரம் ரூபா வரையிலான உதவித் தொகையும், சேதமடைந்த வீடுகளின புனரமைப்பை மேற்கொள்ள தேவைக் கேற்ப ரூபா 5 ஆயிரத்தில் இருந்து ஆகக்கூடிய தொகையாக 15 ஆயிரம ரூபா வரை உதவித் தொகையும் வழங்கப்படவுள்ளன. (ஒ-100)

## புனரமைக்கப்படாத வீதிகள்

கைதடியில் உள்ள வீதிகள் பல வும் நீண்டகாலமாக திருத்தப்படாது சேதமடைந்த நிலையில் காணப்படு கின்றன.

கைதடி வளர்மதி வீதி, கைதடி கலை நகர் வீதி, கைதடி இராஜபுரி வீதி, கைதடி நேவவத்தை வீதி என பல வீதிகள் இவ்வாறு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. (எ-ரி)

## சட்டவிரோத மண் அகழ்வு - தொடர்கிறது

வேலம்பிராய், தச்சன்தோப்பு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மாக மணல் ஏற்றுதல் தாராளமாக இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கைதடிப் பிரதேசத்தில் உள்ள பல உழவு இயந்திரங்கள் இரவு வேளை களில், மக்கள் உறக்கத்தில் இருக் கும் வேளைகளில் வேலம்பிராய், தச்சன்தோப்பு பகுதிகளுக்கு சென்று மேற்படி சட்ட விரோத செயலைப் புரிந்து வருகின்றன எனக் கூறப் படுகிறது. (எ-ரி)


### தேவை

மின்சார உபகரணங்கள் விற்பனை செய்வதில் அனுபவமுள்ள ஆண் தேவை. வயது 25-40 இடையில் விரும்பத்தக் கது.

தொடர்பு:
வீ.ஊ.இல.1552, மேபா, உதயன். (5392)

### மாதச் சம்பளம் ரூபா 6,00,000/=!

விபரங்களுக்கு 16/6, 23/6/2002 "உதயன்" நாளிதழைப் பார்க்கவும் அல்லது நேரில் வரவும்.

திருஞானாஸ்
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (5367)



### அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
## வருடாந்த மஹோற்சவம்

மேற்படி மஹோற்சவம் எதிர்வரும் (05-07-2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வழமை போல் நடைபெறும். தேர்த்திருவிழா 10ஆம் நாளும் தீர்த்தத்திருவிழா 11ஆம் நாள் ஆனி உத்தரத்தன்றும் நடைபெறும் என்பதை அம்பாள் அடியார்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து கோயிலடிக்கு பேருந்து புறப்படும் நேரங்கள்:
இல: 768 காலை 8.45, 10.15, 11.45(புதிய நேரம்)
மாலை 2.30, 3.15, 5.30(புதிய நேரம்)

(5447) ஆலய நிர்வாகிகள்.



## மரண அறிவித்தல்

### சின்னையா இராசையா

அராலி வடக்கைச் சேர்ந்த சின்னையா இராசையா அவர்கள் கடந்த 26.06.2002 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி சின்னையா - தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் வேலாயுதம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோ தரரும், நாகசோதி (கனடா), விசயசோதி (கனடா), சிறீஸ்கந்தன் (கனடா), வசுமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2002) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு அராலியிலுள்ள அவரது சகோதரர் வேலாயுதத் தின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலிப் பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.வேலாயுதம்
(சகோதரர்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (5424)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1941 - 07 - 13



மறைவு 2000 - 06 - 24

அமரர்
### சாமிஐயா செல்லையா

திதி: அபரபக்க ஸப்தமி

அன்போடும் பண்போடும் எமை ஆதரித்து வளர்த்தீர்!
அரவணைத்து காத்தீர்! ஆசையோடு வாழ்ந்தீர்!
உம்மோடு வாழ்ந்த நாள்கள் உள்ளத்திலே உறைந்து
கண்ணீரும் வற்றியதே கருத்தினிலே நினைந்து!

உங்கள் ஆத்மா சாந்தியடை
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

15ஆம் கட்டையடி,
உடுப்பிட்டி. (5430)



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகு 18 - 01 - 1918



விண்ணுலகு 24 - 06 - 2000

### அமரர் சிவகுரு நாகரத்தினம்

(Retired Railway Head Guard)

திதி: 02-07-2002

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
எங்கள் அன்பு ஐயாவே!
ஆறவில்லை எம் துயரம் மாறவில்லை எம் கவலை!
எங்கள் இதயம் உள்ளவரை உங்கள் நினைவு தொடரும்!

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி. (5434)



# வீதி அமைப்பு இயந்திர சாதனங்கள்



பிரதான தார், கற்கள் கலவை இயந்திரம்

மாடல்கள்:
DM 35-முதல் 45 தொன்/மணித்தியாலம்
DM 45-முதல் 60 தொன்/மணித்தியாலம்
DM 50-முதல் 90 தொன்/மணித்தியாலம்



வீதி பதித்தல் செப்பனிடல் இயந்திரம்

கொள்ளளவு:
100 தொன்/மணித்தியாலம்
5 மீற்றர். அகலம்

### ஏனையவை

1.மொபயில் ஹொட் மிக்ஸ் பிட்யுமன்
2.பிட்யுமன் ஸ்பிறேயர்ஸ்
3.வெட் மிக்ஸ் பிளாண்ட்ஸ்
4.கொன்க்றீட் பட்சிங் பிளாண்ட்ஸ் 10 கியூபிக் மீற்றர்/மணித்தியாலம்
5.வேய் பட்சர் ஸ்கேல் ரைப்
6.கொன்க்றீட் மிக்ஸர்ஸ் 14/10. கியூபிக் அடி மற்றும். 10/7. கியூபிக்அடி

Contact:
**SAS SAS ENGINEERING PRIVATE LTD.**

Office: 18, Chitaranjan Road, Teynampet, Chennai 600 018. India.
Ph: 00-91-044-4341698/4347939 Fax: 00-91-044-4320754
Factory: 5\639, Perungudi Panchayat Road, Kandanchavadi, Chennai 600 096.
Ph: 00-91-044-49691901/ 4960829/ 4960028 Fax: 00-91-044-4965376
Grams: SASTECHNO E-mail: sasolivr@md3.vsnl.net.in

(C/22727)

# வியாழ மாற்றம்

# உங்களுக்கு எப்படி?

## துலாம்

வள்ளல் குணமும், பிள்ளை மனமும், அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கையும் உடைய துலா ராசி நேயர்களே!

பொது: கடந்த 6 வருட காலமாகவே ஏராளமான இன்னல்களையும், நிம்மதியின்மையையும் நீங்கள் அனுபவித்து வருகிறீர்கள். இதற்கு சனியும் ஒரு காரணம். ஆனால் சென்ற வருடம் 5ஆவது பார்வையாக குரு பகவான் உங்கள் ராசியைப் பார்த்த காரணத்தால் முக்கால் வாசி துயரங்களிலிருந்து விடுபடத் தொடங்கினீர்கள். இந்த வருடம் விருச்சிகத்தின் மீதும், மீனத்தின் மீதும் குருவின் பார்வை விழப்போவதால் உங்களுக்கு முழுமையான நற்பலன்களைக் கொடுத்துவிடப் போகிறார். வேலைப்பளு கூடுதல், மேலதிகாரிகளின் நிர்பந்தம் போன்ற ஒரு சில சிக்கல்களிலிருந்து நீங்கள் விடுபடாமல் போனாலும் எதிர்காலம் மிகப் பிரகாசமாக உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள். இவ்வருடம் உங்கள் பொருளாதார நிலையும், ஆரோக்கியமும் பலமடங்கு மேம்படும்.

உத்யோகஸ்தர்கள்: கடந்த 24 மாதங்களாய் உங்கள் வேலையில் பல சவால்களை நீங்கள் சந்திக்க நேர்ந்தது. இனி அந்த நிலமை மாறும். ஓய்வெடுக்க முடியாத அளவு பணிச்சுமை இருக்கும் என்றாலும் அதற்கேற்ற வரவும் இருக்கப் போவதால் இனி மனத்தளர்ச்சி தேவை இல்லை.

வியாபாரிகள்: பாக்கியங்கள் உங்கள் கதவைத் தட்டுகிற சமயம் இது. இதுநாள் வரை ஸ்தம்பித்துப் போயிருந்த பல திட்டங்களுக்கு உயிர் கொடுத்து, கணிசமான லாபங்களைக் காண்பீர்கள்.

விவசாயிகள்: தேக ஆரோக்கியம் சீராக இருக்கும். விளைச்சல் மிகத் திருப்திகரமாகமாறும்.

அரசியல்வாதிகள்: வாக்குஸ்தானம் சிறப்பாக இருப்பதால் இனி அடுத்த சில வருடங்களுக்கு உங்கள் ஜெயக்கொடி கீழே இறங்காது. எதற்கும் எதிரிகளின் மீது ஒரு கண்ணை வைத்திருங்கள்

கலைத்துறையினர்: உங்களைப் பொறுத்தவரை கடந்த ஏழு வருடமாகவே நிலைமை மெச்சும்படியாக இல்லை. இனி அந்தக் கொடிய காலகட்டத்தைத் தாண்டுவீர்கள். வருமானம் பொழியும். துலா ராசியுள்ள நடிகர்களின் படங்கள், இனி 100 நாள்களைக் கடந்து ஓடும்.

பெண்கள்: இதுநாள் வரை சஞ்சலங்களுக்கு ஆளாகி, அமைதிகெட்டு வெதும்பிய உங்களுக்கு ஆறுதலாக பிறக்கிறது இந்தக் குருப்பெயர்ச்சி. இனி குடும்பத்தில் சந்தோசமும், தாராளமான பணப்புழக்கமும் ஏற்படத் தடையேதும் இல்லை.

மாணவமணிகள்: வாக்குஸ்தானத்தை குரு பார்ப்பதால் கல்வியில் நீங்கள் கலக்கமின்றி முன்னேறுவீர்கள்.

அறிவுரை: ஜூலை 5ஆம்தேதி குருப்பெயர்ச்சி ஆகிறது. எனினும் இம்மாதம் 31ஆம் தேதி வரை சற்றுப் பொறுமையாகவே இருந்துவிடுங்கள். அதற்கு பிறகு உங்கள் ராஜ்ஜியம் தான்.

## விருச்சிகம்

மற்றவர் துன்பங்களைத் தன்னுடையது போல் நினைத்து பரோபகாரம் செய்யும் உயர்ந்த மனமுடைய விருச்சிக ராசி வித்தகர்களே!

பொது: உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்துக்கும், 5ஆம் இடத்துக்கும் அதிபதியான குரு, 9ஆம் இடத்தில் உச்சனாகப் பிரவேசிக்கிறார். இது பூர்வ புண்ணிய ஸ்தானம் என்பதால் உங்கள் வாழ்வில் இனி செல்வம் கொழிக்கும். பலருக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும்.

கடந்த ஒரு வருடமாகத் துன்புறுத்திய நோய்களின் தீவிரம் வெகுவாகக் குறையும். பலருக்கு புண்ணியத் தலங்களை தரிசிக்கின்ற வாய்ப்பு ஏற்படும். தான தர்மங்களுக்கு அள்ளிக் கொடுக்கும் அளவு பொருளாதார வசதி இருக்கும்.

குருபகவான் உங்கள் ஜென்மத்தையும், 5ஆம் இடத்தையும் பார்ப்பதால் மூலதனங்கள் பெருகி, ஸ்திரமான வருமானத்துக்கு வழிவகை ஏற்படும். அதேநேரம் 8ஆம் இடத்துக்கு சனி வருவதையும் மறந்துவிடாதீர்கள். இதன் காரணமாய் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் செலுத்த நேரிடும்.

உத்யோகஸ்தர்கள்: வருமானம் உயரும். செய்கின்ற வேலையைத் தவிர உபரி இனங்களில் பணம் ஈட்டக்கூடிய வாய்ப்புகள் உருவாகும். பலருக்குப் பதவி உயர்வு கிடைக்கும்.

வியாபாரிகள்: தொழிலை விரிவுபடுத்த புதிய மூலதனங்கள் கிடைக்கும். தடுமாற்றங்கள் நீங்கி, நிரந்தரமான வளர்ச்சி ஏற்படத் தொடங்கும்.

விவசாயிகள்: உடல் உழைப்புக்கு அஞ்சாத விருச்சிக ராசி விவசாயிகளுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. விளைச்சல் அமோகமாக இருக்கும். லாபங்கள் கணிசமாக உயரும்.

அரசியல்வாதிகள்: கிரஹங்களின் போக்கினால் பொது ஜன நன்மைக்கான பல திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி பெரும் புகழ் அடைவீர்கள். கட்சித் தலைமையால் பாராட்டப்படுவீர்கள்.

கலைத்துறையினர்: வாய்ப்புகள் அதிகரிக்கும். அதேநேரம் வீண் அலைச்சல்களும் வெகுவாகக் குறைந்துவிடும். தொழில் ரீதியில் வெளிநாடு சென்று வரும் வாய்ப்பு அநேகருக்கு ஏற்படும்.

பெண்கள்: திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும். புத்திரப்பேறு இல்லாதவர்களுக்கு சந்தானப் பிராப்தி உண்டாகும். தீர்த்த யாத்திரை செல்வதன் மூலம் சீரான மனநிம்மதியைப் பெறுவீர்கள்.

மாணவமணிகள்: தடுமாற்றங்கள் குறையும். ஞாபக சக்தி அதிகரிக்கும். முன்னேறும் வழிகள் புலப்படும்.

அறிவுரை: வருமானம் திருப்திகரமாக இருப்பினும் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. அதேபோல் தேக ஆரோக்கியத்தையும் அலட்சியப்படுத்தாமல் இருக்க வேண்டும்.

## தனுசு

சுயநலத்தை விடப் பொது நலனையே பெரிதாகக் கருதும் பெருந்தன்மை கொண்ட தனுசு ராசி நேயர்களே!

பொது: உங்கள் ராசிக்கும், மீனத்துக்கும் அதிபதியான குரு பகவான், 8ஆம் இடத்துக்கு வருகின்றார். அது அவருக்கு உச்ச ஸ்தானம். ஆயின் அஷ்டமத்து குருவைக் கண்டு நீங்கள் அஞ்சத் தேவையில்லை.

குருவின் பார்வை 12ஆவது இடமான விருச்சிகத்தின் மீதும், 4ஆம் இடமான மீனத்தின் மீதும் விழப்போவதால் பாவ நிவர்த்தி உண்டாகிறது. இதனால் தான தர்மங்களில் உங்கள் மனம் ஈடுபடும். பாடுபடுவது அதிகரித்தாலும் குடும்ப சௌகரியத்தில் குறைவிருக்காது. பல வருடங்களாக இழுத்தடித்த சில பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.

குடும்பத்தில் உள்ள முதியவர்களின் உடல்நலனில் சற்று கூடுதல் அக்கறை காட்டுங்கள். மேலும் மகர, கும்பத்துக்கு அதிபதியான சனி பகவான் மிதுனத்தில் பிரவேசிக்கப் போவதால், தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்துவிடுங்கள். எக்காரணம் கொண்டும் கடன் வாங்காதீர்கள்.

உத்யோகஸ்தர்கள்: வருமானம் அதிகரிக்கும். வேலைப்பளு அதிகமாவதைத் தவிர்க்க முடியாது.

வியாபாரிகள்: கடந்த கால நஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் வருங்கால நலனை எண்ணி உற்சாகத்தோடு செயல்படுங்கள். கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாமல் போகிற தர்மசங்கடம் ஒரு சிலருக்கு நேரிடலாம். எனவே பொறுமையோடு நடை போடுங்கள்.

விவசாயிகள்: வருமானத்துக்குக் குறைவிருக்காது. எனினும் பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளித்தல், உரமிடுதல் போன்ற பணிகளை அவ்வப்போது கவனித்துச் செய்திடவும்.

அரசியல்வாதிகள்: உங்களைத் தூற்றியவர்கள்கூட உங்கள் மீது அபிமானம் கொண்டு உங்களைக் கொண்டாட வருவார்கள். ஆயின், அனைவரிடமும் கவனத்தோடு பழக வேண்டியது அவசியம்.

கலைத்துறையினர்: சம்பளம் பற்றி கண்டிசன்கள் போடாமல் நல்ல வாய்ப்புகளைப் பயன்படுத்துங்கள். இதன் மூலம் பொன்னான எதிர்காலத்தை நோக்கி முன்னேற முடியும்.

பெண்கள்: கணவரோடு சில கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆயினும் உங்களால் உங்களுடைய குடும்பம் பலவிதங்களிலும் நன்மை அடையும்.

மாணவமணிகள்: விஞ்ஞானம், தொழில்துறை, கணிதம் போன்ற இனங்களில் படிப்பவர்களுக்கு ஞாபக சக்திக் குறைவு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே கவனமாகப் பாடங்களைப் படிக்கவும்.

அறிவுரை: வீண் விரயங்கள் ஏற்படலாம் என்பதால் சேமிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவும். குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்த்து விடவும். (தொடரும்)

---

### தமிழ்-சிங்கள இனங்களிடையே

# பகைமையைத் தூண்டுகின்ற தீயசக்திகளை இனங்காணுவோம்; ஒன்றிணைந்து எதிர்ப்போம்

## கலைஞர் புதுவை அன்பன் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

ஒன்றுபட்டு வாழ்ந்த இனங்களிடையே தொடர்ந்தும் பகைமையை உண்டுபண்ணி சுயலாபம் தேடிவருவோரால் இலங்கைத்தீவு எரிந்து கொண்டிருக்கின்றது. எனவே, இந்த இனவாதத் தீயில் இருந்து நாட்டை மீட்பதற்கு அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் பிரபல நாடகாசிரியர் புதுவை அன்பன்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலைஞர் களுக்கான ஒன்றுகூடல் மற்றும் 'கரைதேடும் ஓடங்கள்' நாடக விமர்சன அரங்கு ஆகியவற்றில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒன்றுபட்டு வாழ்ந்து பெரும் சாதனைகளைப் படைத்து வந்தன. ஆனால், சுயலாபம் தேடும் நோக்கில் சிலர் தூண்டிவிட்ட இனத்தீ பற்றி எரிநததில் அப்பாவிகளே அதிகம் அழிவைச் சந்தித்துள்ளார்கள்.

தமிழர் வாழ்வில் சுமத்தப்பட்ட அழுத்தங்கள் அவர்களைப் போராடச் செய்தன. இந்தப் போராட்டங்கள் மிகுந்த உச்சக்கட்டத்தை அடைந்த நிலையிலேயே இன்று சமாதானப் பேச்சுக்களுக்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

ஒரு நாடகாசிரியர் சூழலுக்கு ஏறபத் தனது படைப்பைத் தருதல் வேண்டும். அதனடிப்படையில் எமது கடந்தகால வாழ்க்கை, இன்று நாம் எதிர்நோக்கி நிற்கும் தீர்வு என்ன? என்பதனை எடுத்துக்காட்டும் படைப்பாகக் கரைதேடும் ஓடங்களைப் படைத்துள்ளேன் - என்றார்.

தலைமை உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தனது உரையில்:-

எம்மை ஆயுத முனையில் அடக்கி ஆள நினைத்தபோதே நாம் ஆயுதம் ஏந்தினோம். சுயகௌரவமாக வாழும்நிலை எமது மக்களுக்கு உருவாகவேண்டும். இதுவே நீதியான தீர்வாக அமையும்.

எம்மீது போர் திணிக்கப்படும் போது நாம் நீதிக்காகவும், மக்களுக்காகவும் போராட வேண்டியுள்ளது.

நாம் வன்முறைகளை விரும்புபவர்களல்ல. ஆனால், எமது மக்களுக்காக அதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். எனினும் நாம் அதை விரும்பவில்லை - என்றார்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையின் பெண்கள் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்வீழி தனது உரையில்:-

போராட்டத்திற்கும் எமது உணர்வலைகளுக்கும் உந்துசக்தியாக விளங்குபவர்கள் நாடகக் கலைஞர்கள். போராட்டத்தின் உயிர்நாடிகளாக இருப்பவர்களும் இவர்களே - என்றார்.

நிகழ்வில் புதுவை அன்பனின் தயாரிப்பிலான 'கரைதேடும் ஓடங்கள்' நாடகமும், தென்னிலங்கையில் இருந்து யாழ். வந்துள்ள சர்வசமய சமாதானக் குழுவினரின் 'பாலம்' நாடகமும் இடம்பெற்றன. இறுதியில் 'கரைதேடும் ஓடங்கள்' நாடகக்கலைஞர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-12-ரி)

---



விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அண்மையில் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி பாடசாலையில் நடைபெற்ற நுண்நீர்ப்பாசன முறை பற்றிய விளக்க நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது.

நுண்நீர்ப்பாசன முறை பற்றிய விளங்கங்களை விவசாயிகளுக்கும், ஆர்வலர்களுக்கும் பிறவுண் கம்பனியின் விவசாயப் பணிப்பாளர் வசந்த விக்கிரம எடுத் துக்கூறுவதைப் படத்தில் காணலாம். (எ-180)

---

# யாழ்.வைத்தியசாலையில் சிற்றூழியர் பற்றாக்குறை

யாழ்.போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாகத் தொடரும் சிற்றூழியர் பற்றாக்குறையினால் நோயாளர்களுக்கான சேவைகள் மற்றும் சுத்திகரிப்புப் பணிகள் என்பன பெரும் பாதிப்புக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 20 வருடங்களுக்கு முன்பிருந்த சிற்றூழியர் ஆளணித் தொகையே யாழ்.ஆஸ்பத்திரியில் இன்றுவரை இயங்கி வருகிறது. ஆனால், யாழ்.ஆஸ்பத்திரி போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்ட காலத்தில் இருந்து படிப்படியாக வளர்ந்து தற்போது அதிகரிக்கப்பட்ட வார்ட்டுகள் மற்றும் பலபிரிவுகளுடன் இயங்கி வருகிறது. நோயாளர்கள் தொகையும் அக்காலங்களைவிட தற்போது நான்குமடங்கு அதிகரித்துள்ளது. ஆனால், சிற்றூழியர் ஆளணி மட்டும் அதேதொகையிலேயே இருந்து வருகிறது. இதுபற்றி அந்த நாள்களில் இருநதே நிர்வாகம் அமைச்சு மட்டத்துடன் பல தடவைகள் தொடர்பு கொண்டும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

சுமார் 500இற்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் கடமைபுரிய வேண்டிய இவ்வைத்தியசாலையில் சுமார் 350 பேர் வரையிலேயே பணியில் ஈடுபட்டுள்ளனர். சாதாரணமாக ஒரு வார்ட்டுக்கு ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளி என்ற எண்ணிக்கைகூட இல்லாத நிலையில் நான்கு வார்ட்டுகளுக்கு ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளி என்ற வீதத்தில் அதிக பளுவை தாங்க வேண்டிய நிலையில் சுத்திகரிப்புத் தொழிலாளர் உள்ளனர்.

இதேவேளை -

நோயாளர்களுக்கான ஏனைய சேவைகளைக் கவனிக்கவும் நான்கு, ஐந்து பேர் கடமைபுரிய வேண்டிய வார்ட்டுகளில் ஒருவர் அல்லது இருவர் கடமை புரியவேண்டிய நிர்ப்பந்தம் நிலவுகிறது. இதனால் நோயாளர் பராமரிப்புச் சேவையை அதிக சிரமங்களுடனேயே செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நிலவுகிறது.

இந்நிலை பற்றி ஆஸ்பத்திரி நிர்வாகத்தால் அண்மையில் அமைச்சிடம் எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-180-15)

# தொற்றும் நோய்க்கு ஆளாகேன் பராபரமே - II

கடை வாசலில் சிங்கம் சொன்னான்:

"யாழ்ப்பாணத்தை ஒரு சிங்கப்பூராக மாற்ற வேண்டும்." செல்லம் வாயைத் திறந்து கேட்டுக் கொண்டிருக்க ஈ ஒன்று தவறுதலாக (புரிந்துகொண்டு) உள்ளே நுழைந்திட, பெரிதாகத் காறித் தெருவிலேயே துப்பினார்.

"துப்பிறதைப் பார்த்தா சிங்கப்பூராக மாற கனகாலம் எடுக்கும்"

"சனம் படுகிற பாட்டுக்கு,- பசிக்குது வா"

இருவரும் தேநீர்க் கடையில் நுழைந்து கதிரையில் அமர்ந்தார்கள்.

"தம்பி... சாப்பிட ஏதாவது கொண்டு வா" கருநிறத் துணியினால் மேசையைத் துடைத்துக் கொண்டிருந்த பையன் துணியை ஒரு புறம் வைத்து விட்டு கண்ணாடி அலுமாரிக்கு ஓடினான். கதவைத் திறக்க சிறைப்பட்டிருந்த ஈக்கள் வெளியே பறந்தன. பட்சணத்தட்டில் மேலும் சில பட்சணங்களைச் சேர்த்து இவர்கள் முன் கொண்டுவந்து வைத்தான் கடைச் சிறுவன்.

"பார்த்தியா, மேசை துடைத்த கை கழுவப்படவில்லை" செல்லம் அதனைக் காதில் வாங்கவில்லை. உமிழ்நீரை விழுங்கிக்கொண்டே வடையை அழுத்தினான்; வாய்ப்பனை நசித்தான்.

"உன்னட்டை காசு இருக்குத் தானே"

"எனக்கு வேண்டாம்" அருவருப்புடன் சொன்னான் சிங்கம்.

"தொட்டால் தொட்டதைச் சாப்பிட வேண்டும். செஸ் விளையாட்டுப்போல ரூல்ஸ் வேணும்"

"சும்மா இரு, பசிவந்திடப் பத்தும் பறந்து போகும்" வாய்ப்பனை எடுத்துக் கடித்த வேகத்தில் பத்து ஈக்கள் பறந்துபோயின.

மனிதர்களைக் கட்டுப்படுத்துகிற- அறிவை மயக்குகிற- இந்த அடிப்படைத் தேவைகளான உணவும் நீரும் நோய்க்கிருமிகள் பரப்புகிற பிரதான வாகனங்கள்.

நெருப்புக்காய்ச்சல், வயிற்றுளைவு, வாந்திபேதி, போலியோ, ஈரலழற்சி, வைரஸ் ஆகியவற்றால் தோற்றுவிக்கப்படுகின்ற பல உணவுக்கால் வாயத் தொகுதி நோய்கள் உணவு அல்லது நீரினால் பரவுகின்றன.

இந்த நோய்க்கிருமிகள் நோயாளிகளின் மலத்துடன் வெளியேறுகின்றன. ஒரு நெருப்புக் காய்ச்சல் நோயாளிக்கு நோய் குணமடைந்த பின்பும்

## சுகநலம்

சில மாதங்களுக்கு நோய்க்கிருமிகள் மலத்துடன் வெளியேறும். சிலர் வாழ்நாள் பூராகவும் நோயற்ற நிலையிலும் கூட நோய்க்கிருமிகளை வெளியேற்றிக் கொண்டிருப்பார்கள். இவர்கள் நோய்க்காவிகள் எனப்படுகின்றனர்.

### தொற்று

நாம் உண்ணுகின்ற உணவு மற்றும் குடிக்கும் பானங்களுடன் இந்த மலம் சேருகின்றபோது கிருமித்தொற்று ஏற்படுகிறது. இந்த மல, உணவு சந்திப்பு எவ்வாறு நிகழுகிறது?

மலங்கழித்த பின் கைகளை சவர்க்காரம் இட்டுக் கழுவவேண்டும் என்பது அடிப்படை விதி. மலங்கழித்த பின்னர் கைகளைக் கழுவாத ஒருவர் (நோயாளியாகவும் இருந்தால்) மலக்கூடக் கதவின் கைப்பிடியில், வாளியில், கிணற்றுக் கயிறில், நீரில், பாவிக்கும் உபகரணங்களில், உடையில் எல்லாம் நோய்க்கிருமிகளைச் சிந்திச் செல்லுகிறார்.

அவர் உணவு பரிமாறுபவராக, உணவு வகைகளைக் கையாளுபவராக இருந்தால் நோய்க்கிருமிகளையும் சேர்த்துப் பரிமாறுவார்.

இதனைத் தடுக்க மலங்கழித்த பின்னரும், உணவருந்த, உணவு வகைகளைக் கையாள, பரிமாற முன்னரும் கைகளைச் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல் வேண்டும்.

"இரண்டு பிளேன் ரீ" என்றான் செல்லம். "குடிப்பாய் தானே, கொதிக்க வைத்த நீர்தானே"

பையன் தேநீரைக் கொண்டு வந்து வைத்தான். தேநீர்க்கோப்பையைச் சுற்றி ஈக்கள் பறந்தன.

"இலையான் விழுந்துவிட்டது" சிங்கம் திகிலடைந்து சொன்னான்,

"பாசி பிடிச்ச கோப்பை விளிம்பில் இருந்தது வழுக்கி விழுந்திருக்கும் அல்லது சுடுதண்ணி வைச்சு குளிக்க யோசிச்சு இருக்குமோ" செல்லம் தேநீரைக் குடித்தான்.

ஈக்கள் அருவருப்பான உயிரினம். மலத்தில் பிறந்து மலத்தில் வளர்ந்து வருவன. அழுக்கு அவற்றுக்கு மிகவும் பிடிக்கும். அவற்றின் இயல்பு பராபரத்தபடியே இருத்தல். மலத்திலுமிருக்கும், பறந்து வந்து உணவிலுமிருக்கும். அது உணவு உண்ணும் முறை சில சுரப்புகளை வெளியில் கக்கி (எச்சில் துப்புவதுபோல) கூழாக்கி உள்ளே எடுத்தல். அது அடிக்கடி மலங்கழிக்கும், மலத்திலும் மலங்கழிக்கும்; உணவிலும் மலங்கழிக்கும்! ஈகள் லட்சக்கணக்கான நோய்க்கிருமிகளைக் கொண்டிருக்கின்றன. ஈக்கள் மூடிவைக்கப்படாத உணவுகள் மீது அமருகின்றபோது பெருமளவு நோய்க்கிருமிகளை உணவின்மீது விட்டுச் செல்லுகின்றன. அவைதான் கிருமிகளின் துருப்புக்காவி.

### தடுப்பு

உணவுகளை மூடிவைத்தாலும், இலையான்களை ஒழித்தாலும் தொற்று நோய்கள் பரவுதலைத் தடுக்கின்றமையுத்த தந்திரம்.(துருப்புக்காவிகளை அழித்தல்). மலசலகூடங்களில் மலங்கழிக்க வேண்டுமென்பது (பாதுகாப்பான முறை) அடிப்படை சுகாதார விதி.

வெளிகளில், பற்றை மறைவுகளில், வடலி பனங்கூடல்களில் கழிக்கப்படுகின்ற மலம் சுற்றிவந்து நாம் குடிக்கின்ற நீரில், உணவில் சேர்ந்து விடுகின்றது.

மழை, வெள்ளம் ஆகியன பிரதேசத்து கிணறுகளில் மலத்தை கொண்டுவந்து சேர்க்கின்றன. பறவைகள் (காகம்), ஈக்கள், விலங்குகள், உணவிலும் நீர் நிலைகளிலும் கிருமிகளைக் கொண்டுவந்து சேர்க்கின்ற பணியைச் செய்கின்றன. (காகங்கள் மலத்தைக் கள்ளிலும் சேர்க்கும்) நெருக்கமான குடியிருப்புகளில் மலக்குழியும் கிணறும் அருகில் இருக்க நீருடன் மலம் கலக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

ஆக, யாழ்குடா நாட்டில் அநேகர் மலங்கலந்த நீரைத் தான் அருந்துகிறார்கள். கொதித்தாறிய வடிகட்டிய நீர், அதில் தயாரிக்கப்படுகின்ற பானங்கள சுகாதாரமானவை. ஐஸ்கிறீம் போன்ற குளிர்நிலை உணவு வகைகள் நீண்ட காலம் நோய்க்கிருமிகளை உயிருடன் வைத்திருக்கக் கூடியவை.

கிணறுபோன்ற நீர் நிலைகளுக்கு குளோரின் இடுதல் நோய்கிருமிகளை அழிக்கும்.

### வறுமை

ஒவ்வொரு மனிதரும், உணவகங்களும் சுத்தமான, சுகாதாரமான முறைகளைக் கையாண்டால் மேற்குறிப்பிட்ட நோய்கள் பரவுதலைத் தடுக்க முடியம். குறிப்பாக நோய் பரவுகின்ற காலங்களில் அடிப்படை சுகாதார முறைகள் கவனிக்கப்பட வேண்டும்.

"சரி, சரி கஷ்டப்பட்ட சனங்கள் அடுத்த நேரத்துக்கு சாப்பிட வழியில்லாதவர்கள் சவர்க்காரமிட்டு கை கழுவவேண்டும் என்றால் என்ன செயயிறது. அதுகளும் இருக்குதுகள் தானே" என்றான் செல்லம்.

வறுமை, பட்டினி, போசாக்கின்மை, சுத்தமான குடிநீர், நீரின்மை, மல சலகூடம் இன்மை என்பன காரணமாகவே வறியமக்கள் தொற்றுநோய்களால் அதிகம் பாதிப்புறுகிறார்கள். அதுவும் வறுமைப்பிடியுள் சிக்குண்ட மக்களுக்கு, 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல' போசாக்கு இன்மையோடு நோயும் சேர்ந்து கொள்கிறது.

வசதியிருந்தும் அறியாமையும் அலட்சியமும் நிறைந்த சிலர் தொற்று நோய்கள் பரவுவதற்கு உறுதுணையாயிருக்கிறார்கள்.

ஏப்பம் விட்டுக்கொண்டு செல்லம் எழுந்தான். முகத்தில் பூரண திருப்தி. சிங்கம் சோர்ந்து வெளியில் வந்தான். எல்லாம் மறந்து இரண்டு கிழமைக்குப் பிறகு செல்லத்துக்குக் காய்ச்சல் வந்தது.


"வெளியில சாப்பிடுறனீங்களா?"

"சவர்க்காரம் போட்டு கை கழுவுறனீங்களா?"

"ஓம், டொக்ரர் நான் நல்ல சுத்தம் வெளியில சாப்பிடுறதில்லை." ஈனஸ்வரத்தில் செல்லம் விட்டுக் கொடுக்காமல் சொன்னான்.




## கழுவாத கைகள்....



**டாக்டர் அ.கிருஷ்ணேந்திரன்**

"நெருப்புக் காய்ச்சலுக்குரிய அறிகுறி" என்றார் மருத்துவர்.

### எமக்குத் தேவை

- ▲ சவர்க்காரமிடப்பட்டு கழுவப்பட்ட சுத்தமான கைகள்.
- ▲ சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட, எப்போதும் மூடிவைக்கப்பட்ட உணவு.
- ▲ கொதித்தாறிய வடிகட்டிய நீர் அல்லது அந்நீரில் தயாரிக்கப்பட்ட பானங்கள்.
- ▲ அனைவருக்கும் மல சல கூடம்.
- ▲ சுகாதார விதிகள் கடைப் பிடிக்கப்படுகிற உணவகம்.
- ▲ ஈக்கள் அற்ற இராச்சியம்.
- ▲ எல்லாவற்றுககும் மேலாக பொருளாதாரம், கல்வியறிவு, ஸ்திரமான அரசியல். ★


## எலெக்ரீஷன் தேவை

கொழும்பிலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு எலெக்ரீஷன் ஒருவர் உடன் தேவை. எலெக்ரோனிக், மோட்டார் வைண்டிங் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தங்குமிட வசதியும் உண்டு.

*விளம்பர இல: 1558,*
மே/பா உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/22765)



## தென்மராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம்

கண்டி வீதி - சாவகச்சேரி.

## முக்கிய அறிவித்தல்

கடந்த 30.06.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தென்மராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கும் முடிவுகளுக்கும் அமைய புதிய வாகனப் பதிவு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை இத்தால் சகலருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- தலைவர்.

(5452)



பருத்தித்துறை

புனித தோமையார் ஆலய

## இறைமக்களின் பெருவிழா

03-07-2002

☆ நற்கருணை ஆராதனை

இன்று (02-07-2002) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

☆ வருடாந்த திருவிழாத் திருப்பலி

நாளை (03.07.2002) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெற்று தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

பங்குத் தந்தையும்,
ஆலய மக்களும்.

(C/22762)



## வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. 01-03 வரையான வேலைகளுக்கு அரச திணைக்களங்களில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அவற்றின் மூலப்பிரதியைச் சமர்ப்பிப்பதன்மூலம் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் எதிர்வரும் 16.07.2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் பி.ப.2.00 மணிக்குக் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை *"தவிசாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி"* என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் எதிர்வரும் *16.07.2002*ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | பொ.சே. வரி |
|---|---|---|---|---|
| 01. | ஆவரங்கால் சந்தை புனரமைப்பு | 2300.00 | 500.00 | 62.50 |
| 02. | கோப்பாய் கலம்பரை வீதி புனரமைப்பு | 3000.00 | 500.00 | 62.50 |
| 03. | இருபாலை கொல்களம் திருத்தம் | 250.00 | 250.00 | 31.25 |

மேற்குறிப்பிட்ட கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும், பொருள்கள சேவைக்கான வரியையும் செலுத்துவதன்பேரில், எதிர்வரும் 15.07.2002ஆம் திகதி பி.ப. 12.30 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ.குணசிங்கம், ஜே.பி.யு.எம்.
தவிசாளர்,
*வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.*

*வலி.கிழக்கு பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம், நீர்வேலி.*
*01.07.2002.*

(சி-22763)

# பேச்சுகள் தாமதமடைவது குறித்து அரசாங்கத்திற்கு கவலை இல்லையா?

மே மாதத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் நிறைவேறியிருக்க வேண்டும். ஆனால், இன்றுவரை அவை இரண்டுமே நிறைவேறாமல் போயுள்ளன.

ஒன்று 18 ஆவது அரசியற் சட்டத் திருத்தம். அதன்மூலம் ஓர் அரசாங்கம் பதவிக்கு வந்து ஓர் ஆண்டு முடிந்தபின் ஜனாதிபதி தன்னிச்சையாக நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடத்தவுள்ள அதிகாரத்தை இல்லாமற் செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை.

இதற்கான திருத்தச் சட்ட மூலத்தை மீண்டும் மீண்டும் ஒத்தி வைத்த ஐ.தே.மு. அரசாங்கம் இன்று அதனை நிறைவேற்ற முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டது.

காரணம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு வேண்டிய ஆதரவை பொ.ஐ.முவிடம் இருந்தே பெறவேண்டியிருக்கிறது. ஆனால், அதற்கு மறுப்புத்தெரிவிக்கப்பட்டுவிட்டது.

ஆரம்பத்தில் பொ.ஐ.மு. ஆதரவு தரும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. பின்னர் அரசியல் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களால் அது பிழைத்து விட்டது.

இரண்டாவது, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுகள் மே மாதத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும் ஜூன் பிற்பகுதி என்றும், ஜூலை முற்பகுதி என்றும் ஒத்திப்போடப்பட்டது. இப்போது ஓகஸ்ரிலாவது இடம்பெறுமா என்ற கேள்விக்குறியை எழுப்பியுள்ளது. பொ.ஐ.முவின் ஆதரவைப் பெறுவதற்கான அதே முயற்சிகளே இதன் பின்னணியிலும் நடைபெற்று வருகின்றன.

18 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு ஏற்பட்டுள்ள கதியே இதற்கு இறுதியில் ஏற்படுமோ?

**அமைச்சர் பீரிஸ் கருத்து**

இதற்குக் காரணங்கள் உள்ளன. பேச்சுத் தொடர்பாக அரசு தேசிய நல்லிணக்கம் ஒன்றை ஏற்படுத்த விரும்புகின்றது. ஏனைய கட்சிகளின் கருத்தை அரசு அறிய விரும்புகின்றது என்று சமாதான விவகாரங்களை முன்னின்று கையாளும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார். மேலும் தாய்லாந்தில் பேச்சுகள் தாமதமடைவது பற்றி அரசு கவலைகொள்ளவில்லை. இன்று குண்டுவெடிப்புகளில்லை; தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் இல்லை; பொருளாதார நன்மைகள் கிடைக்கின்றன; உல்லாசப் பயணத்துறை மறுபடி வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது; வெளிநாட்டு முதலீடுகள் வந்துசேரத் தொடங்கியுள்ளன.

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஒப்பமிட்டதால் இவை கிடைத்துள்ளன.

"போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து 160 நாள்களுக்குள் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்பது அவசியமில்லை. உறுதியான அடித்தளமே முக்கியம், திகதிகள் அல்ல" எனவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

## சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி

இவை புறநிலையின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் கூற்றுக்களாக இருக்கமுடியாது.

தாய்லாந்தில் பேச்சுகள் தாமதமடைவது பற்றி அரசாங்கம் கவலைப்படவில்லை என்பது தற்செயலாக வெளிவந்த வார்த்தைகள் அல்ல.

உண்மையில் பேச்சுகள் பின்தள்ளப்படுவதால் அரசாங்கம் அனுகூலமடைகிறது என்பதே உண்மை. அரசாங்கமே பேச்சுக்கள் பின்தள்ளப்படுவதற்கான புறச்சூழலை அமைத்து வருகிறது என்பது அதனை விடவும் முக்கியமான உண்மை.

**மூன்று ஒப்பந்தங்கள்**

போர்நிறுத்த ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்ட இந்தஒருசில மாதங்களுக்குள்ளாக ஐ.தே.மு. அரசாங்கம் பாதுகாப்புத் தொடர்பாக மூன்று ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

அமெரிக்காவுடன் எல்லை கடந்த சேவை ஒப்பந்தம் செய்துகொண்டு அதன் படை நடமாட்டங்களை அனுமதித்திருக்கிறது.

இராணுவத் தளபாடக் கொள்வனவு போன்ற விடயங்களையும் முன்னெடுத்து வருகின்றது. இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பொலீஸாருக்கு அதிரடிப்பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இறுதியாகச் சீனாவுடன் கடற்கலங்கள், உபகரணங்கள் தொடர்பான ஒப்பந்தத்தைச் செய்து அந்நாட்டின் ஆசிகளையும் தாராளமாகப் பெற்றிருக்கிறது.

இவையாவும் முழுமையான ஒரு போருக்கு வேண்டிய அமைதியான தயாரிப்புக்களாகக் கொள்ளப்பட வேண்டியவை.

போர்நிறுத்தக் காலகட்டத்தை ஐ.தே.மு. அரசாங்கம் மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்கும் தாராளமாகப் பயன்படுத்தி வருகிறது.

மறை எண்ணின் அளவுக்கு ஆழமாகச் சென்றுவிட்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தன்னை மீட்டெடுப்பதற்கு வேண்டிய அனைத்துலக செல்வாக்கையும் தேடிக் கொள்கிறது.

வடக்கு - கிழக்கின் புனர்நிர்மாணம் எனும் பெயர்ப்பலகையை மாட்டிக்கொண்டு, நாட்டின் அபிவிருத்திக்கு வேண்டிய பொருளாதார உதவிகளை ஏனைய நாடுகளில் இருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெறத்தொடங்கியுள்ளது. இதனையே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

**தாய்லாந்துப் பேச்சுகள்**

தாய்லாந்தின் பேச்சுகள் கேள்விக்குறிக்கு முன்னிறுத்தப்பட்டுள்ள விவகாரத்தை 'தமிழ் கார்டியன்' பத்திரிகை தெளிவுபடுத்தியிருக்கிறது. அதன் 19 ஆம் திகதி வெளியீட்டில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

"நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகள் தளர்வடைந்துள்ளன. ஜூன் மாதத்திலும் பேச்சுகள் நடைபெறவில்லை. அதற்குப் பின்னரும் அது விரைவில் நடைபெறும் என்று கூறமுடியாது.

இயல்புநிலையை மீள ஏற்படுத்தும் விடயத்தில் இலங்கை அரசு பின்வாங்குவது தெரிகிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தும் விடயத்தில் கட்டம் கட்டமான அணுகுமுறையை அது கைவிடத் தயாராகி விட்டது.

இடைக்கால நிர்வாகத்தை நிகழ்ச்சிநிரலில் பின்னோக்கித் தள்ளவும், அடிப்படை விவகாரங்களை முதன்மைப்படுத்தவும் முன்னிற்கின்றது.

வடக்கு - கிழக்கில் தமிழ்ப் பாடசாலைகளில் இருந்து வெளியேறும் படைகளைத் தங்கவைப்பதற்கு அந்தந்த இடங்களிலேயே தங்குமிட வசதிகளை ஏற்படுத்துவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது.

- இவ்வாறு படைகளின் நிலைகளை அரசு பலப்படுத்திவருகிறது. துருப்பினரை தென்னிலங்கை முகாம்களுக்குத் திருப்பி அனுப்ப மறுக்கிறது.

**படைகுவிப்பு**

1995 இல் யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கென்றே பல படைப் பிரிவுகள் கொண்டுவரப்பட்டன. அப்படைப்பிரிவுகள் இனிமேலும் அங்கேயே வைத்திருக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் கருதுவது, இனிமேலும் தாக்குதல்கள் நடத்தப்பட விருப்பதைக் காட்டுகின்றது.

இப்போது நடைமுறையில் இருப்பது ஒரு போர்நிறுத்தம் மட்டுமே என்று இராணுவத்தளபதி பலகல்ல அழுத்திக்கூறியிருக்கிறார். தமிழர்களின் பார்வையில் வடக்கு - கிழக்கில் இயல்புநிலையை ஏற்படுத்தாமலும் இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிநிரல் ஒன்று இல்லாமலும் கொழும்பு நிர்வாகம் விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைத்துச்செல்ல முயற்சிக்கிறது என்ற வகையில் தமிழ் கார்டியன் தெரிவித்திருக்கிறது.

இறுதியில் இலங்கை அரசாங்கம் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தே பேச்சுகளுக்கான திகதி பற்றி முடிவெடுக்கப்படும். எனவே இது கொழும்பு நிர்வாகத்தின் கைகளிலேயே உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தனது அறிக்கையில் இருதரப்பினருக்கும் இடையே சில சிக்கல்கள் எழுந்திருப்பதையும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

**கலைவாணன்**

'தமிழ் கார்டியன்' தெரிவிக்கும் கருத்துகள் விடுதலைப் புலிகளின் கருத்தாக இருக்குமாயின் அமைச்சர் கூறியிருப்பதுபோல, திகதி ஒன்றை நிர்ணயிப்பது ஒன்றும் தேவையான விடயமே இல்லை. பேசவும், செய்யவும், தீர்க்கவும் வேண்டிய விடயங்கள் ஏராளமாகவே உள்ளன.

ஐ.தே.மு. தலைமை, பேச்சுகள் நடத்தப்படுவதற்கு அவசரம் காட்டாவிட்டாலும் புலிகள் தரப்பில் அவசரம் இல்லாதிருக்குமா?

பொ.ஐ.மு. ஆதரவை எதிர்பார்த்து 18 ஆவது சட்டத் திருத்தத்திற்கு ஏற்பட்ட கதியைக் கண்டோம்.

தேசிய நல்லிணக்கம் கருதி ஏனைய கட்சிகளின் கருத்தறியும் அரசாங்கத்தின் முயற்சிக்கும் அதே கதிதானா? *(நன்றி : சுடர்ஒளி)*

---

கடந்த வாரம் கிழக்கில் இடம்பெற்ற

# வன்முறையில் பாதிப்புற்றோர்க்கு விசேட திட்டத்தின் கீழ் நஷ்டஈடு

## அமைச்சர் மொறகொட வாக்குறுதி

கொழும்பு,ஜூலை2

கிழக்கில் கடந்தவாரம் இடம்பெற்ற ,வன்முறைக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட திட்டத்தின் கீழ் நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கப்படும்.

- இவ்வாறு விஞ்ஞான பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட உறுதியளித்தார்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை, ஓட்டமாவடிப் பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டபோதே இதனை அமைச்சர் தெரிவித்தார்.

வாழைச்சேனைப் பகுதியில் சேதமடைந்த தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சென்று அமைச்சர் பார்வையிட்டதுடன், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களையும் தனித்தனியாகச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

அமைச்சரின் இந்த விஜயத்தின் போது அவருடன் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல மற்றும் உள்துறை அமைச்சின் செயலாளர் யுனைஸ், பிரதிப் பதில் பொலீஸ் மா அதிபர் ஆனந்தராஜா, 23ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில்தென்னக்கோன், வாழைச்சேனை பிரதேச செயலர் புண்ணியமூர்த்தி ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

தமிழ்மக்களை வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்போது பொலீஸாரும், படையினரும், சட்டம், ஒழுங்கை உரிய முறைப்படி அமுல்படுத்தியிருந்தால் மோசமான விளைவுகளைத் தடுத்திருக்க முடியும் என்று தமிழ்மக்களின் பிரதிநிதிகளால் அமைச்சரிடம் எடுத்துக்கூறப்பட்டது.

அத்துடன், இதற்குப் பொறுப்பாக இருக்கும் வாழைச்சேனை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும் என்றும் தமிழ்மக்கள் சார்பில் கோரப்பட்டது.

வாழைச்சேனை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சின் செயலாளர் அப்போது அங்கு தெரிவித்தார். இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட திட்டத்தின்கீழ் நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்கு உரியநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். (ஒ-6-9)



**சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையை அண்மையில் யாழ்.விஜயம் செய்திருந்த மக்கள் வங்கி இயக்குநர் சபைத் தலைவர் லால் நாணயக்கார நாடாவெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.**

**அருகில் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மார்டின் பெர்னாண்டோ, வடவலய உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன், பிரதேச உதவிப் பொது முகாமையாளர் க.ஆனந்தராசா, சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.பாலச்சந்திரன், யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை முகாமையாளர் து.ரகு ஆகியோர் காணப்படுகின்றனர்.** (எ-117)

---

## வாசகர் திருமுகம்

### திட்டமிடப்படாத போட்டிகளும் பாதிக்கப்படும் மாணவர்களும்

வடக்கு - கிழக்கு மாகாண ரீதியாகவும், தேசிய மட்டத்திலும் பாடசாலைகளுக்கிடையில் பல்வேறு போட்டிகள் வருடாவருடம் நடத்தப்படுவது யாவரும் அறிந்ததே. அந்தவகையில் இவ்வருடமும் இப்போட்டிகளை நடத்துவதற்கான முன்னாயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையில், இப்போட்டிகள் நடத்தப்படும் கால ஒழுங்கின் காரணமாக மாணவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. இதேகால இடைவெளியில் யாழ்.வலயத்தில் விஞ்ஞான வினாவிடைப் போட்டியினை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக அறியவருகின்றது. இதேகால இடைவெளியில் ஆங்கில தின, தமிழ்த்தினப் போட்டிகள் நடத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒரு மாணவன் விளையாட்டில் ஈடுபடுகிறான் என்றால், அவன் விஞ்ஞானப் போட்டிகளிலோ, தமிழ், ஆங்கில தினப் போட்டிகளிலோ கலந்துகொள்ளத் தகுதியற்றவன் என்றோ அல்லது தமிழ்மொழித் தினப்போட்டியில் கலந்துகொண்டால் அவன் ஏனைய போட்டிகளுக்கு லாயக்கற்றவன் என்றோ அதிகாரிகள் எண்ணிவிடக் கூடாது. தமது வேலைச் சுமைத்திற்காகப் போட்டிகளின் கால ஒழுங்கைத் தீர்மானிக்காமல் மாணவர்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு அவர்கள் பாதிக்கப்படாத வகையில் போட்டிகளை நடத்தவேண்டும் என்பதே எனதும் என்போன்ற மாணவ சமுதாயத்தினதும் பேரவா.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

*யாழ்ப்பாணம்.* **பாதிக்கப்படும் மாணவன்.**

### யாழ். முகமாலை பஸ்சேவையில் பயணிகள் அனுபவிக்கும் துன்பம்

முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சேவையில் ஈடுபடும் வட. பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மக்களை மாக்களாகப் பாவித்து பஸ்ஸில் அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றுகின்றனர்.

தினமும் காலையில் இருந்து பல இன்னல்களுக்கு உள்ளாகும் பயணிகள் மேற்படி பஸ்களில் அடைத்து ஏற்றப்படுவதனால் மேலும் இன்னலுக்கு உள்ளாகின்றனர். எந்த ஒரு பயணியைக் கேட்டாலும் மேற்படி பயணம் குறித்து மிகுந்த மனவருத்தத்துடனும் மன உளைச்சலுடனும் கூறுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. அத்துடன் பயணிகளின் பொதிகளுக்கு கட்டணம் அறவிடுவது மட்டுமன்றி அவற்றை குப்பைகூழங்கள்போல் பாவித்து கண்டபடி எறிந்து சேதப்படுத்துவதையும் இந்தச் சேவைகளில் அவதானிக்க முடிகிறது.

எனவே, ஒரு பஸ்ஸில் பயணம் செய்யக்கூடிய பயணிகளையும் பொதிகளையும் ஏற்றி தேவை ஏற்படின் கட்டணத்தை சிறிது உயர்த்தி மக்களை மாக்களாக்காமல் பயணத்துக்கு வசதி செய்யலாம்.

தயவுசெய்து இவ்விவகாரம் குறித்து உரிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

*சுன்னாகம்.* **சி.சிவசுப்பிரமணியம்**

## மூதூர் மற்றும் வாழைச்சேனை

# அசம்பாவிதங்களுக்கு காரணமானோர் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குக!

## சம்பந்தன் எம்.பி. வலியுறுத்து

திருகோணமலை,ஜூலை2

மூதூர், வாழ்ச்சேனை பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்குக் காரணமானவாகள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குக.

- இவ்வாறு கோரியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன்.

மேற்படி சம்பவம் குறித்து அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒரு வாரமாக மூதூர், வாழைச்சேனைப் பகுதிகளை ஆட்டம் கொள்ளவைத்த வன்செயல்களை யிட்டு தமிழர் விடுதலைக்கூட்டணி ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது.

பல நூற்றாண்டு காலமாக தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மிகவும் சமாதானமாகவும், இணக்கமாகவும் கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுடைய நாளாந்த வாழ்க்கையில் பல விதங்களில் பிரிக்க முடியாத வகையில் பரஸ்பரம் ஒருவர் உதவியை மற்றவர் நாடி நிற்கும் நிலையே இருந்து வந்துள்ளது.

மிகவும் பெரும்பான்மையான தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் எதிர்காலத்திலும் சமாதானமாகவும் இணக்கமாகவும் ஒருமித்து வாழவே விரும்புகிறார்கள். எமது மக்கள் கௌரவத்துடனும், செழுமையுடனும் ஒருமித்து வாழ்வதற்கு எம்மத்தியில் வன்முறைக்கு முற்றாக இடமில்லை என்பதை நாம் எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும்.

மூதூரிலும் வாழைச்சேனையிலும் நடைபெற்ற அசம்பாவிதங்கள் தற்போது உருவாகியுள்ள சமாதானச் சூழலை குழப்பமடையச் செய்வது போல் உள்ளன. சம்பவங்களை தீய நோக்குடன் ஆரம்பித்தவர்கள் இந்த சமாதானச் சூழலைத் தகர்க்கும் நோக்கத்துடன் செயல்பட்டவர்கள், இச்சம்பவங்கள் எவ்வளவுதான் ஆத்திரம் ஊட்டக் கூடியவையாக இருந்தபோதிலும், சமாதானத்தில் ஆர்வம் உள்ளவர்கள், பழிக்குப்பழி வன்முறையில் ஈடுபடுவதனால் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் செயல்படுபவர்களுக்கு கை கொடுத்து உதவுகின்றார்கள்.

எதிர்வன்முறைச் சம்பவங்களினால் தீங்கை விளைவிக்கும் நோக்குடன் வன்முறைச் செயல்களை ஆரம்பிப்பவர்களுக்கும், சமாதானத்தில். ஆர்வமுடையவர்களுக்குமிடையிலுள்ள வித்தியாசங்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. இவ்விதமான நிகழ்வுகள் முழுசமாதான முயற்சிகளையும் பாதிக்கக் கூடியவை. சமாதானத்தில் ஆர்வமுடையவர்கள் எதிர்வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் -

தீய நோக்குடன் வன்முறையை ஆரம்பிப்பவர்களை அடையாளம் காட்டி, அவர்களை தனிமைப்படுத்துவதில் அக்கறை கொள்ளவேண்டும் என்றும் - தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றது. - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# எத்தனை அமைச்சர்கள் வந்தென்ன; எமது துயர் இன்னும் தீரவில்லையே!

## வடமாகாண தெங்கு செய்கையாளர் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

குடாநாட்டுக்கு எத்தனை அமைச்சர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் வந்துசென்றபோதும் தாம் தமது தென்னந்தோட்டங்களுக்கு செல்ல முடியாதுள்ளதாக வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தக் கவலை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் -

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, வடமராட்சியின் ஒருபகுதி மக்களுக்கு பொருளாதார வளம் கொடுப்பது தென்னந்தோட்டங்களே. அதை நம்பியே அப்பகுதிமக்கள் வாழ்ந்தனர். இன்று அந்தநிலை கேள்விக்குறியாகிவிட்டது. தென்னந்தோட்டங்கள் எல்லாம் பாரிய அழிவினால் உருக்குலைந்து அழியும் தறுவாயிலுள்ளன. சில முற்றாக அழிந்துவிட்டன.

தோட்டங்களை ஊடறுத்துச் செல்லும் காப்டரண்கள் (Bunds), பங்கர்கள் (Bunkers) தொடர்ச்சியான 'ஷெல்' பொழிவு, விமானக்குண்டுவீச்சு, பங்கருக்கு மரங்களைத் தறித்தல் போன்ற செயல்களே அழிவிற்கான காரணங்கள்.

2000 ஆம் ஆண்டு மார்ச்சில் திடீரென வெடித்த யுத்தத்தினால் மக்கள் சடுதியாக - தோட்டங்களிலிருந்து - வெளியேறவேண்டியிருந்தது. இதனால் அவர்கள் பல இழப்புக்களைச் சந்தித்தனர். உழவு இயந்திரங்கள், கார்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள், தோட்ட வேலைக்கான மண்வெட்டி, கோடரி, கத்தி போன்ற உபகரணங்கள். இதைவிட லட்சக்கணக்கான பெறுமதியுள்ள கால்நடைகள் என அனைத்து உடைமைகளையும் அவர்கள் இழந்தனர்.

இப்போது தோட்டங்களும் அழிந்த நிலையில் வருமானமுன்றி உரிமையாளர்களும் தொழிலாளர்களும் சொல்லணாத்துன்பத்தை அனுபவக்கிறார்கள். தோட்டங்களுக்கு உரிமையாளர் அல்லது தொழிலாளர் போகமுடியாதிருப்பதால் தோட்டங்களின் சீரழிவை தடுத்து நிறுத்த முடியாமல் உள்ளது. தோட்டப்பிரதேசம் முழுவதும் மிதிவெடி, கண்ணிவெடிகளால் நிறைந்துள்ளன. தோட்ட வேலிகள் அழிக்கப்பட்டிருப்பதால் தோட்ட பராமரிப்பு மிகக் கடினமாகிறது.

தோட்ட உரிமையாளரும் தொழிலாளரும் இரு வருடங்களாக அகதி வாழ்க்கையில் ஈடுபட்டு மனம் நொந்து கையிலிருந்த சிறு சேமிப்பும் அழிந்த நிலையில் இடம்பெயரகத் திரிந்து பிள்ளைகளின் கல்வியையும் சிதைத்து மன உளைச்சலினால் நோய்வாய்ப்பட்டுள்ளனர். தோட்டங்களில் காவல் இல்லாததால் உரிமையில்லாதவர்கள் தோட்டங்களுக்குள் புகுந்து சூறையாடுகிறார்கள். இதுவும் தோட்ட சீரழிவுக்கு ஒரு காரணம்.

1980 ஆம் ஆண்டுக்குப்பின் புனர் நடுகைக்கு அரசாங்கம் வழங்கிய மானியம் யாழ்குடாநாட்டில் வழங்கப்படவில்லை. ஏனைய மாவட்டங்களில் 5 வருடங்களுக்கு 50 ஆயிரம் ரூபா பகிர்ந்து வழங்கப்பட்டது. யுத்தத்தைக் காரணங்காட்டி பல வருடங்களாக உரம் சீராக வழங்கப்படவில்லை. இதனால் 1980 ஆம் ஆண்டுக்குப்பின் புதிய தோட்டங்கள் உருவாகவில்லை.

தோட்ட மரங்களின் பசளைத் தேவைக்காகப் பெரும்பாலான தோட்டங்களில் மாட்டுப்பட்டி, ஆட்டுப்பட்டி வைத்திருப்பது வழக்கம். இப்போது அவை அனைத்தும் அழிந்துவிட்டன. அவற்றின் பெறுமதி பல லட்சம் ரூபாவாகும்.

தென்னந்தோட்டங்களில் வேலை அனுபவம்பெற்ற தொழில் செய்வோர் இன்மை, உயர்ந்த கூலிச் செலவினங்கள், தோட்ட உரிமையாளரின் பணமுடை, உரமின்மை என்பவற்றால் தோட்டப் பராமரிப்பு பலவீனமடைந்து தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது.

இதுவரை யாழ்.குடாநாட்டுக்கு எத்தனையோ மந்திரிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள் வந்து போய் விட்டார்கள். ஆனால், நாங்கள் தோட்டங்களுக்குப் போக முடியாமலுள்ளது.

ஆகவே, எமது உடனடித் தேவைகளாகப் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.

உடனடியாக உரிமையாளரைத் தோட்டங்களுக்குச் சென்று விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதிக்க வேண்டும்.

தோட்ட உரிமையாளர்களினால் தான் தோட்டங்களை அக்கறை உடன் நல்ல நிலையில் பராமரிக்க முடியும்.

பெருந்தோட்ட அலுவலகம் நிர்ணயித்த கணக்குப்படி இருவருட வருமான இழப்புக்கு (Loss of income) நட்டஈடு தோட்டங்களுக்கு வழங்கப்படவேண்டும்.

உயர்மட்டக்குழு ஒன்று யாழ். வந்து தென்னந்தோட்டங்களை பார்வையிட்டு தயாரிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் 10 வருட அபிவிருத்தித்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவேண்டும்.

பெரும் எண்ணிக்கையில் நாற்றுக்கள் உற்பத்தி செய்யக்கூடிய முறையில் நாற்றுப்பண்ணை தேவை.

1980 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட மானிய புனர்நடுகைத் திட்டம் மீண்டும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தெங்கு விரிவாக்க நிலையம் ஒன்று யாழ்நகரில் ஆரம்பிக்கவேண்டும்.

கொழும்புப் பயணிகளுடன் சேர்க்காமல் பச்சிலைப்பள்ளி பிரதேசம் செல்வோருக்குத் தனியாக வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இத்தகைய ஒருங்கிணைந்த நடவடிக்கைகளால் தென்னந்தோட்டங்களைப் புனரமைத்து, தென்னமரங்களைச் செழித்து வளரவைத்து யாழ்.குடாநாட்டை மீண்டும் பொன் கொழிக்கும் பூமியாக்கி மக்கள் இந்த மண்ணில் மீண்டும் சிறப்புற வாழவேண்டும் என்றுள்ளது. (ஓ)

## தேர்தல் இடாப்பு திருத்தப் பணி

2001ஆம் ஆண்டுக்குரிய தேர்தல் இடாப்புக்களின் திருத்த வேலைகள் யாவும் யாழ்.செயலக தேர்தல் அலுவலகத்தினால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தவேலைகள் பூர்த்தியடையும் தறுவாயில் இருப்பதையடுத்து 2002 ஆம் ஆண்டுக்கான திருத்தவேலைகள் எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் யாவும் கிராம அலுவலர்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளதுடன் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்யப்படும் எனவும் தேர்தல் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-10)

## கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை2

'ஹெல்பேஜ்' ஸ்ரீலங்கா, முதிர்வில் உதவி நிறுவனம் பாடசாலை மாணவர் மத்தியில் மும்மொழியிலும் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

'சமுதாயத்தில் முதியோரைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துதல்' என்ற தலைப்பில் கனிஷ்ட பிரிவு (6ஆம் - 10ஆம் தரங்கள்) சிரேஷ்ட பிரிவு (11ஆம்-13ஆம் தரங்கள்) என்ற இரண்டு பிரிவுகளாக நடாளாவிய நிலையில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்களின் ஆக்கங்களை பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்து அதிபரூடாக எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.(எ-11)

## கண்காட்சி

சத்தியசாயி நிறுவனத்தின் வட பிராந்திய இளைஞர் பிரிவினால் நடத்தப்படும் கண்காட்சி எதிர்வரும் 12,13,14ஆம் திகதிகளில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள மனிதமன மேம்பாடு தொடர்பாக கண்காட்சி விளக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.(ஓ-15)

## பட்டம் வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ தினங்களில் 'இராமாயணம்' தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் 'அருள்ஞான வேந்தன்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஆலய பரிபாலன சபைச் செயாளர் துரகு தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆறு. திருமுகன் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். பண்டிதை பொன். பாக்கியம் பாராட்டுரை வழங்கினார்.(எ-28)


### வீடு விற்பனைக்கு

இராச வீதி, கோப்பாய்தெற்கில் 6 பரப்புக் காணியில் கிணற்றுடன் 3 அறைகள், ஹோல், குசினி என்பவற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: எஸ். மகாலிங்கம், மே/பா புலவர் வீடியோ, கோண்டாவில் வடக்கு. (5462)


### ஊர்காவற்றுறை பிரதேச சபை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தலில் திருத்தம்

30.06.2002ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் 8ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் திறக்கப்படும் நேரம் 16.07.2002 காலை 10.00 மணியாகும்.

நா.திருச்செல்வம்,
உப-தலைவர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

(C/22767)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சரவணையூர்
உயர்திரு.
குழந்தைவேலு கணேசலிங்கம்
B.A. Dip in Edu. S.L.P.S. G. I

அவர்கள் எமது பாடசாலையின் முன்னாள் அதிபராகவும் பழைய மாணவராகவும் தற்போது யா/வேலணை சேர் வை.து.ம.ம. வித்தியாலயத்தின் அதிபர் சேவையிலிருந்து அச்சேவை அறுபதைப் பூர்த்தி செய்து 21.06.2002இல் ஓய்வுபெற்றமையையிட்டு அவரது ஓய்வு நாள்கள் சிறப்புற அமைய வேண்டுமென்று ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியை வேண்டி அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பாடசாலைச் சமூகத்தினர்.

யா/சரவணை நாகேஸ்வரி ம.வி. (5473)

ஓம் நமோ நாராயணா

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்
12
-
03
-
1919



அஸ்தமனம்
13
-
07
-
2001

திருமதி
இராசம்மா ஆறுமுகம்
(சாமி அம்மா)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்போடும் பண்போடும் எமை வாழவைத்த தெய்வமே!
இரண்டு ஆடி மறைந்தாலும் -காந்தி அம்மா
மலர்ந்த முகம் காணாமல் மனமோ அடிக்குதம்மா!
அணைந்தும் அணையாத எங்கள் குடும்ப- தீபமே!
பரந்தாமனின் அடியார்- மனதிலே
இரண்டறக்கலந்துவிட்ட- தாயே!
கண்ணன் ஆலயத்தில் உங்கள் ஒளி வீச- இறைஞ்சுகிறோம்.


இன்று (02-07-2002) செவ்வாய்க்கிழமை அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிப் பிரார்த்தனை ஸ்ரீசக்கராழ்வார் ஆலயத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து நடைபெறும் அன்னதானத்திலும் அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- ஆ.தேவராசாவும் ஞானக்குழந்தைகளும்.

ஸ்ரீசக்கராழ்வார் ஆலயம்,
கோப்பாய்வடக்கு, கோப்பாய். (C-22764)

### முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
27
-
01
-
1939



மறைவு
13
-
07
-
2001

அமரர் சதாசிவம் சிவசம்பு (பாண்டியன்)

திதி: அபரபக்க அட்டமி

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

அல்வாய்ரை வடக்கு,
மீசாலை. (5455)

மனைவி: சி.கமலாவதி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 'பான்பராக்'கிற்கு அடிமையாகும் மலையக இளைஞர், யுவதிகள்!

## ஆபத்துக்கள் குறித்து சுகாதார அதிகாரி எச்சரிக்கை

கொழும்பு,ஜுலை2

பாகிஸ்தான் பீடாவான 'பான்பராக்'கிற்கு மலையக இளைஞர், யுவதிகளும் அடிமையாகி வருகின்றனர். மலையக நகர்ப்பகுதி, தோட்டப்புற கடைகளில் இவை அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

இது தொடர்பாக நுவரெலிய மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் சாவித்திரியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் தொடர்பு கொண்டு கேட்டார்.

அப்பொழுது டாக்டர் சாவித்திரி தெரிவித்ததாவது:-

"பான்பராக் பாக்கு பக்கெட்டுக்களில் குறிப்பிடத்தக்களவு போதைப் பொருள் கலக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இதனால் இந்தியாவில் சில மாநிலங்களில் இதற்குத் தடையும் விதித்துள்ளனர். ஆனால், இலங்கையில் பரவலாக விற்பனை செய்யப்படுகின்ற இப்பாக்கிற்கு மலையக இளைஞர்கள் அடிமையாகக்கூடாது.

"இந்தப் பாக்கினால் பெண்களுக்கு வயிற்றில் பல கோளாறுகள் ஏற்படுவதுடன், ஆண்களுக்கு இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் வரக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன"

- இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து தோட்டங்கள் தோறும் 'சுகாதாரத்தின் மூலம் சமூக சீர்திருத்தம்' என்ற கருப்பொருளில் பிரசார வேலைத்திட்டங்களும் கருத்தரங்குகளும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினரின் தகவல் இணைப்பதிகாரி ஆறுமுகம் ரமேஸ் தெரிவித்தார்.

(ம)

# தென்மராட்சி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கிடைக்கும்

## தென்பகுதி மக்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஜுலை2


தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு தென்னிலங்கைப் பகுதி மக்கள் கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

அதற்கென பத்து லொறிகளில் பொருள்கள் எடுத்துவரப்படவுள்ளன.

தென்மராட்சியில் இயங்கும் பாடசாலைகளில் கல்வி பயிலும் - வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த - மாணவர்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

(ஜ-117)


## வாழ்த்துகின்றோம்



பேராசிரியர்

**நீ.மரிய சேவியர் அடிகள்**

(இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)

குருத்துவத்தில் நான்கு தசாப்தங்கள் சிறப்புறப் பணிபுரிந்த அருட் பணியாளன் நீ.மரிய சேவியர் அடிகள் பல்லாண்டு காலம் வளமுடன் வாழவும், பணி பல புரியவும்

*எம் இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்!*

மூத்த கலைஞர்கள் சார்பில்,
A.V.ஆனந்தன், பேக்மன் ஜெயராஜா,
N.S.ஜெயசிங்கம், K.இராயப்பு,
V.J.கொன்ஸ்ரன்ரைன், C.M.நெல்சன்.

(5475)


## யாழ்ப்பாணம் - மாநகரசபை

### இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 15.07.2002 முதல் 31.12.2002 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 201.25ஐயும், கீழ்க்காணப்படும் கேள்விப் பிணைப்பணமும் செலுத்துவதன்பேரில் எதிர்வரும் 10.07.2002ஆந் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணிவரையும் கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு முன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். அதேதினம் பி.ப. 3.00 மணிக்கு கிடைக்கப் பெற்ற கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

விவரம்

| இறைச்சிக்கடைகள் | | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ஜி.எஸ்.ரி. நீங்கலாக) |
|---|---|---|---|
| 01. பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை | இல. 1 | 2,500.00 | 22,000.00 |
| 02. பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை | இல. 2 | 2,500.00 | 22,000.00 |
| 03. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல. 1 | 2,500.00 | 15,000.00 |
| 04. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | இல. 7 | 1,000.00 | 4,000.00 |
| 05. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 6 | 1,000.00 | 2,800.00 |
| 06. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 7 | 1,500.00 | 4,800.00 |
| 07. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 8 | 1,000.00 | 2,500.00 |
| 08. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 9 | 1,000.00 | 2,500.00 |
| 09. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 10 | 1,000.00 | 2,500.00 |
| 10. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல. 11 | 500.00 | 1,500.00 |
| 11. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல. 12 | 500.00 | 1,500.00 |

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*2002.07.01*

(C/22766)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுலை2

கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை மாதா ஆலய மடுத்திருநாள் திருப்பலி இன்று காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனி, திருச்சொரூப ஆசீர்வாதம் என்பனவும் இடம்பெறும.

(ம-4)

✪ ✪ ✪

வடமராட்சி,ஜுலை2

பருத்தித்துறை புனித தோமையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து நடைபெற்ற நற்கருணை ஆராதனையின் இறுதி ஆராதனை இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் நடைபெறுவதுடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும்.

(எ-173)

★ ★ ★

கோப்பாய்,ஜுலை2

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் கடந்த 40 ஆண்டுகளாக இறைபணியாற்றி மக்களின் துன்பங்களைத் தீர்த்த திருமதி இராசம்மா ஆறுமுகம் (சாமி அம்மா) அவாகளின் முதலாம் ஆண்டு சிரார்த்த திதி இன்று செவ்வாய்க்கிழமை ஆலயத்தில் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படும்.

இதனையொட்டி ஆலயத்தில் விசேட பூசைகள் மற்றும் அன்னதானம் என்பன நடைபெறும்.

(ம-72)


## தவறிவிட்டது

கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தனியார் பஸ்சில் பேர்ஸுடன் அட்டியல் ஒன்று தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் செ.யேசுராசா, சமையல் பகுதி, யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துதவவும்.

(5478)

லஷ்சுமி இணுவில்.

பிரசாந்த், ரிங்கிகன்னா, ரகுவரன்

மஜ்னு

(சினிமா)

தினசரி: 10.30, 2.30, 6.00 (ப.நே.) (5480)

ராஜா யாழ்ப்பாணம்.

4ஆம் திகதிவரை

குணால், மோனல் மற்றும் பலர் நடித்த

பேசாத கண்ணும் பேசுமே...

காட்சிகள்: தினசரி 10.30, 2.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30

(C/22753)

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று மட்டும்

ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த

ரோஜாக்கூட்டம்

(சினிமா)

தினசரி: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)

நாளைமுதல் Jemes Bond 007

The World is not enough

(அதிரடித் தாக்குதல்கள் நிறைந்த படம்)

(C/22754)

நாகம்ஸ் சுன்னாகம்

நவரச நாயகன் கார்த்திக் (இருவேடம்), ரோஜா, கௌசல்யா நடித்த

சந்தித்தவேளை

(சினிமா)

காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)

நாளைமுதல் ராஜ்ஜியம்

(5472)


## திருத்தம்

நேற்றைய உதயனின் 8ஆம் பக்கத்தில் வெளியான New Science College தனியார் கல்வி நிறுவனத்தின் விளம்பரத்தில் 'New Science College' என்பதற்குப் பதிலாக 'New Science Hall' என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. அதனைத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.

(ஆ-ர்)

# மூன்று பாடசாலைகள் பளையில் மீண்டும் இயங்கும்

தென்மராட்சி,ஜுலை2

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகள் எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீள இயங்கவுள்ளன.

பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, பளை நகரப்பகுதியில் உள்ள அந்திராயன் தேவாலய வளவில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகையிலும் -

மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, முகாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவை ஒன்றிணைந்து முகாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் - இயங்கவுள்ளன.

இப்பாடசாலைகளின் அசிரியர்கள் அன்றைய தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்குமாறு கோட்டக் கல்வி அலுவலர் அ.கயிலாயபிள்ளை அறிவித்துள்ளார்.

இப்பாடசாலைகளுக்கு கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள் பாய், பிளாஸ்ரிக் வாளி ஆகியவற்றை யுனிசெப் நிறுவனத்தினர் வழங்கவுள்ளனர்.

புலோப்பளையில் உள்ள பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டட திருத்த வேலைகள் நடைபெற்றுவருவதால் அவை பூர்த்தியடைந்ததும் பாடசாலை அந்த இடத்தில் மீள இயங்குமெனவும் அதன்பின்னர் தேவாலயத்தில் உள்ள தற்காலிக கொட்டகையில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை இயங்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-117)

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி,ஜுலை2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஜ-117)

## குருபூசை

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் 63 நாயன்மார் குருபூசை வரிசையில் நாளை புதன்கிழமை ஏயர்கோன் கலிக்காமநாயனார் குருபூசை வழிபாடு இடம்பெறுகிறது. இதனை ஒட்டி சோமஸ்கந்தர் ஆலயத்தில் விசேட பூசை மற்றும் பிரார்த்தனை உரை என்பன இடம்பெறவுள்ளன.

(ஒ-72)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜுன்2

உரும்பிராய் கிழக்கு புனித மிக்கேல் சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நிலைய முன்றலில் சனசமூக நிலைய தலைவர் நா.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் செ.குகதாசன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

(எ-180)

★ ★ ★

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி சங்கம் நடத்தி வரும் தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டத்தில் நவாலி தென்றல் வி.கவும் உடுவில் ஆலடி சிந்து வி.கவும் பங்குபற்றுகின்றன.

(-86)


## BEACON

வதிரி, கரவெட்டி.

**DAY CLASS**

(கணித, உயிரியல் பிரிவு)

ஆரம்பம் - 04.07.2002 (வியாழன் பி.ப. 3.00 மணி)

PHY. - திரு. குமரன் (வியாழன் 3.00 மணி பி.ப.)

CHE. - திரு.சண் (திங்., புத., வெள். 9.30 மணி மு.ப.)


குறிப்பு: CHE. - திரு.சிவத்திரன் (சனி, ஞாயிறு - 5 - 6 பி.ப.)

வினா-விடை வகுப்பு

மற்றைய பாடநேரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(5459)


## 10ஆவது வருட நினைவஞ்சலி



அமரர்

**கந்தசாமி கனகலிங்கம் (கனகு)**

(லொறிச் சாரதி - யாழ்ப்பாணம், கொழும்பு)

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 27.08.1959 | 02.07.1992 |

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்களை நெஞ்சோடும் நினைவோடும் இருத்திவிட்டோம்!

*ஓம் சாந்தி!*

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை, சகோதரர்கள்.

*எப்ரேசன் றோட்,*
*மல்லாகம்.*

(5479)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் துரைசிங்கம்

(Retd. Govt. Officer - Department of Electrical Undertaking)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக்கொண்ட மயில்வாகனம் துரைசிங்கம் நேற்று (01.07.2002) திங்கட்கிழமை காலமானார்..

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கனகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திருமதி மனோரஞ்சிதம் சுவாமிநாதன், மதுரநாயகம் (Electrical Engineer), மகேசலிங்கம் (Aeronautical Engineer), மதிபாபரணம் (Deputy Commissioner of Labour), மகேஸ்வரன் (Inspector of Works - Department of Industries) மற்றும் திருமதி மகாலட்சுமி குமாரதாசன் (Australia), திருமதி இராஜராஜேஸ்வரி இராஜரட்ணம் (Colombo), திருமதி சிவஞானவதி வயித்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.07.2002) திங்கட்கிழமை மாலை 4.00மணிக்கு இணுவிலிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிவஞானவதி வயித்திலிங்கம்
(சகோதரி - Bon)

*தியேட்டர் ஒழுங்கை,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

(5476)

மட்டக்களப்பிலிருந்து

# பொலீஸ் பாதுகாப்புடன் நேற்று பஸ் சேவைகள்

மட்டக்களப்பு,ஜூலை2

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களுக்கான போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் நேற்றும் பொலீஸ் பாதுகாப்புடன் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் வாழைச்சேனை, ஓட்டமாவடி பகுதிகளில் இடம்பெற்றுவந்த வன்செயல் சம்பவங்களை அடுத்து வெளியிடங்களுக்கான பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை பொலீஸ் பாதுகாப்புடன் எட்டு பஸ்களில் பொதுமக்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

பதற்றமான இடங்களைத் தாண்டியாவெட்டுவான் வரை பொலீஸார் பஸ்களில் சென்றனர்.

இதேபோன்று பொலீஸ் பாதுகாப்புடன் சில பஸ்கள் வெளியிடங்களில் இருந்து மட்டக்களப்புக்கு வந்தன. (ம-3-21)

# வாழைச்சேனை கலவரம் குறித்து அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிப்பு

மட்டக்களப்பு,ஜூலை2

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான அறிக்கை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு நேற்றுமுன்தினம் வாழைச்சேனைக்குச் சென்ற அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினர் இது குறித்த அறிக்கையை நேற்று பிரதமரிடம் கையளித்தனர்.

இதேவேளை -

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கலவரங்களினால் சிதைவடைந்திருக்கும் தமிழர் - முஸ்லிம் உறவைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் ஹக்கீம் நேற்றுக்காலை தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்துடன் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தினார். (ம-4-12)

## லங்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிமெந்தைப் பொதிசெய்யும பணியே அங்கு தற்சமயம் இடம்பெறவிருக்கின்றது என்றும் -

காலக்கிரமத்தில் பாரியளவிலான உற்பத்தி நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்றும் - அனில் கொஸ்வத்த தெரிவித்தார்.

இத்தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்கள் பாவிக்கக்கூடிய நிலையில் உள்ளன என்றும் -

பூரணமாகத் தொழிற்சாலையை இயக்கத் தேவையான நிதியை வெளிநாடுகளில் இருந்து எதிர்பார்த்திருப்பதாகவும் - அவர் கூறினார். (ம-3-4-12)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் அரச தரப்பு கண்காணிப்புக்குழு உறுப்பினர் 12பேரும் நேற்று கொழும்புக்கு வரவழைக்கப்பட்டதால் இன்று கூட்டம் கூடும் சாத்தியமில்லை. இன்று கூடினாலும் கூட்டத்தைப் பகிஷ்கரிப்பதென புலிகளின் பிரதிநிதிகள் இருவரும் திட்டமிட்டுள்ளனர்.

இன்றைய கூட்டத்தை எதிர்வரும் வியாழனன்று நடதத கண்காணிப்புக் குழுத் தலைவர் எல்லையின் எடுத்த முயற்சியும் கைகூடவில்லை எனத் தெரிகிறது.

இதற்கிடையில் -

கடந்த வெள்ளியன்று கல்முனையில் நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா ஏற்பாடு செய்த கண்காணிப்புக்குழு - பொதுமக்கள் சந்திப்பிலும் புலிகளின் பிரதிநிதிகள் இருவரும் கலந்துகொள்ளவில்லை.

இவர்களுக்கு நியமனக்கடிதம் மற்றும் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படாததாலேயே கூட்டப் பகிஷ்கரிப்பு இடம்பெறுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஓரிரு நாள்களில் மட்டு. - அம்பாறை சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலனைச் சந்திக்கவுள்ளனர். (ம)

## கல்வி அமைச்சருடன் சந்திப்பு!

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவொன்று கல்வி, உயர்கல்வி, மனிதவள அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கை இன்று மாலை 4மணிக்கு கல்வியமைச்சின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

சங்கத்தினால் அமைச்சரிடம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைகள் எதிர்நோக்கும் 30 அம்சக் கோரிக்கைகள் தொடர்பான இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

இன்றைய கலந்துரையாடலை சங்கத்தின் தலைவர் சி.தண்டாயுதபாணி தலைமையில் தாய்ச்சங்க நிர்வாகிகளும் மாவட்ட நிர்வாகிகளும் கலந்துகொள்ளவுள்ளதாக சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்தார். (ம-10)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த நூற்றியறுபது நாள்கள் பூர்த்தியாகும்போது முகாமை அகற்ற ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவித்தனர்.

இதேவேளை -

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக வவுனியாவில் இருந்து வந்த இராணுவப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டனர் என்றும் -

சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று படையினரை மேல் விசாரணைக்காகக் கைது செய்துள்ளனர் என்றும் -

மற்றொரு தகவல் தெரிவித்தது. (ம-3-4-12)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நானாட்டான் சந்திப் பகுதிக்கு வந்தனர். அங்கே நின்ற அனைவரையும் சரமாரியாகத் தாக்கினர். எல்லோருக்கும் அடி, உதை. சுமார் பதினைந்து பேர் காயங்களுக்கு உள்ளானார்கள்.

ஆத்திரமடைந்த மக்கள் இரவு 11.30 மணியளவில் கற்களைப் போட்டு வீதியை மறித்தும், ரயர்களை எரித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அருகே இருந்த நானாட்டான் விடுதலைப் புலிகளின் அலுவலகத்திலும் முறையிட்டனர்.

மன்னார் உதவி அரசியல் பொறுப்பாளரான மூர்த்தி, நானாட்டானுக்குச் சென்று மக்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார். மக்கள் அமைதியாக வீடுகளுக்குத் திரும்பினர்.

அப்போது அங்கு வந்த முருங்கன் பொலீஸார் திடீரென அந்த மக்களை வழிமறித்துத் தாக்கத் தொடங்கினர். இதனால் கலவரமடைந்த மக்கள் மீண்டும் கத்திக் குளறியபடி அங்குமிங்கும் ஓடினர்.

நேற்றுக் காலையில் அவர்கள் மீண்டும் வீதி மறிப்பிலும் கடை அடைப்பிலும் ஈடுபட்டனர்; ஹர்த்தால் நடத்தினர்; யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இதுபற்றி அறிவித்தனர்.

காலை 10.30 மணியளவில் மன்னார் பொலீஸ் அத்தியட்சகர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோர் நானாட்டானுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

அப்போது அங்குள்ள மக்கள் நானாட்டானில் உள்ள இராணுவ முகாமை உடனடியாக அகற்றவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நடந்த சம்பவங்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். (உ)

வேலணை கடற்படை முகாம் அமைந்துள்ள

# வங்களாவடி வீதியூடான போக்குவரத்துக்குத் தடை!

வேலணை,ஜூலை2

வேலணையில் கடற்படையினரது பிரதான முகாம் அமைந்துள்ள வங்களாவடி வீதியூடாகப் பொதுமக்கள் செல்வதற்கு நேற்றுமுதல் கடற்படையினர் தடைவிதித்துள்ளனர்.

முகாமிற்குத் தெற்குப்புறமாக - காவலரண்களுக்கு அப்பால் இருக்கும் - தோட்ட நிலங்கள் மற்றும் வயல் வெளிகளூடாக பாதை ஒன்றை அமைத்துள்ள கடற்படையினர் அதனூடாகப் பொதுமக்களைப் பயணம் செய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை -

வேலணை மத்திய கல்லூரி, வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு அருகாக - மேற்குப்புறமாக - அமைந்துள்ள வீடுகளில் இருந்து கடற்படையினர் தமது நிலைகளை அப்புறப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், பிரதான முகாமிற்கு கிழக்குப் பக்கமாக உள்ள வீடுகளை சுவீகரித்து பிரதான முகமோடு இணைதது்ள்ள கடற்படையினர் முகாமை விஸ தரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதான முகாமைச் சுற்றி புல்டோசர்களின் உதவியுடன் பாரிய மண் அணைகளைக் கடற்படையினர் அமைத்து வருகின்றனரெனவும் கூறப பட்டது. (ம-9-16)

## வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாதம் 7ஆம் மற்றும் 10ஆம திகதிகளில் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட மற்றும் கலைப்பீட மாணவர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டதை அடுத்து பல்கலைக்கழகப் பொது அறையில் உள்ள பொருளகள் உட்பட மாணவர் ஒருவருக்குச் சொந்தமான தொலைத்தொடர்பு நிலையம் என்பன அடித்தும், உடைதத்தும் சேதமாக்கப்பட்டது தெரிந்ததே.(ம-10)

## கண்ணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகள் பிரிவின் கோரிக்கையின் பேரில் கண்ணி அகற்றும் பணிக்காக இங்கு வந்துள்ளோம். லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அரச சார்பற்ற அமைப்பே எமது அமைப்பாகும்.

வடக்கு - கிழக்கில் கண்ணிகள் இருக்கும் இடங்களை இனங்காணும் பணிகளை நாம் உடனடியாக மேற்கொள்ளவிருக்கின்றோம். வன்னியிலும் எமது பணியை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான உபகரணங்களைக் கொண்டுவரவுள்ளோம்

இந்தப் பணிகளை ஆறுமாதங்களில் பூர்த்தி செய்யவிருக்கின்றோம். அதன் பின்னர் கண்ணிவெடிகளை அகற்றுவதற்குத் தேவையான நிதியை எந்த நாடாவது தரும் பட்சத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொள்வோம். நிதி உதவி கிடைக்காவிட்டால் எமது பணியை நிறுத்திவிடுவோம்.

வடக்கு - கிழக்கில் 500 பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு கண்ணி அகற்றும் வேலை தொடர்பாகப் பயிற்சி அளிக்கவிருக்கின்றோம். கண்ணி அகற்றும் பணியில் எமது நிறுவனம் ஈடுபட்டால் இவர்களை அந்தப் பணியில் ஈடுபடுத்துவோம்.

எமது அமைப்பின் தலைமையகம் யாழ்ப்பாணத்திலேயே அமையும். தேவையைப் பொறுத்து ஏனைய இடங்களில் சிறு அலுவலகங்களை அமைப்போம் - என்றார்.

இந்த நிறுவனத்தில் மற்றொரு வெளிக்கள அதிகாரியான வலன் கும்முனுவவும் உடனிருந்தார்.(ம-3)

## தங்காலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலரும் இக்கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டிருப்போருக்கு பிணை வழங்காமை, வழக்கு விசாரணைகள் தாமதமடைந்து வருகின்றமை, சிறைச்சாலையில் போதிய வசதிகள் இன்மை ஆகிய பிரச்சினைகளுக்கு கிளர்ச்சியாளர்கள் தீர்வு கோரினர்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் நேற்றுக் காலை தங்காலைச் சிறைச்சாலைக்குச் சென்று கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த கைதிகளின் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தினர். அதன்போது கைதிகளின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்பட்டது என்று சிறை அதிகாரிகள் கூறினர்.

சிறைச்சாலை கைதிகளில் சிலர் நேற்றுமுன்தினம் சிறை ஆயுதச் சாலையை உடைத்து ஆயுதங்களைக் கைப்பற்றி, சிறைக்காவலர்கள் சிலரையும் பணயம் வைத்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

• அதிகாரிகளுடன் பேச்சு நடத்த வழிவகுக்கும் வரை பணயக் கைதிகளை விடுவிக்கமாட்டோம்; ஆயுதங்களைக் கீழே வைக்கமாட்டோம் என்று இக்கைதிகள் தெரிவித்திருந்தனர். ரி-56 ரக துப்பாக்கிகள் 4, ரிவோல்வர்கள் 3, ரிப்பிட்டர் துப்பாக்கிகள் 4, ரி.56 ரக ரவைகள் 750, எச்.ஜி. ரக ரவைகள் 450 ஆகியவற்றைக் கைதிகள் கைப்பற்றியிருந்தனர்.

இக்கிளர்ச்சியை அடுத்து பொலீஸாரும் இராணுவத்தினரும் சிறைச்சாலையைச் சுற்றிவளைத்தனர். பின்னர் அங்கு இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலும் கைக்குண்டு வெடிப்பிலும் ஒரு பொலீஸார், ஒரு சிறைக காவலர் உட்பட 8 பேர் காயமடைந்தனர்.

சிறைக்குள் காயமடைந்திருந்த ஏழு பேரை கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினமிரவு விடுவித்தனர். அவர்கள் தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ம-4-12)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
கமல், சிம்ரன்
◆ பஞ்சதந்திரம் ◆
◆ நாகலஷ்சுமி ◆
(பிற்பகலில் பிரதிகள் பெறலாம்)
ITN பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.
(C/22772)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
கமல், சிம்ரன் நடித்த
பஞ்ச தந்திரம்
பிரதிகள் உடன் பெறலாம்.
✱ பிறேசில் - ஜேர்மனி இறுதிக் கால்பந்தாட்டப் போட்டி பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.
வீடியோ விமல் யாழ்ப்பாணம்.

A/L DAY CLASS
கலை - வர்த்தகப் பிரிவுகள்
நாளை புதன் ஆரம்பம்
காலை 8.00 மணி (ப.நே.)
பொருளியற் கல்லூரி
(5467) இணுவில்.

வீடியோ CD வெளியீடுகள்
☆ பஞ்ச தந்திரம் ☆
☆ நாகலிங்கம் ☆
(V.CD)
அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/22771)

SUBRA (14)
சித்தன்கேணி.
Paper Class
2003 A/L
கலை, வர்த்தக பிரிவு
ஆரம்பம் - 05.07.2002
அனுமதிகளைப் பெறலாம்.
நேர அட்டவணை அலுவலகத்தில்.
(C/22732)

ENGLISH
Spoken and Grammar
By: BRITTO
நாள் : 03.07.2002 (புதன்)
நேரம் : பகல் 12 மணி (ப.நே.)
இடம் : மின்னொளி கல்வி நிலையம்
கைதடி (முத்துக்குமாரசாமி பாடசாலைக்கு அருகில்).
வகுப்புகள்:திங்கள், புதன் 12 மணி
(5461)

A/L 2003 DAY CLASS
ஆரம்பம்:
03.07.2002 புதன் 7.00
Acc. -திரு. பாலவாசன்
Eco. -திரு.மோகன்
B.St. -திரு.யசோ
-திரு.சிவராஜா
Log. -திரு.மனோகரன்
Tam. -திரு. நாக.தமிழிந்திரன்
Dra. -திரு. சுதன்
Hi.Cul. -திரு. உமாசர்மா
Geo. -திரு.பாலா
Cri. -செல்வி துவாரகா
Pol.Sc. -திரு.கேதீஸ்வரன்
BEACON யாழ்.
வெலிங்டன் சந்தியருகில்.
(5450)

இதோ! விற்பனைக்கு வந்துவிட்டன!!
YASO MOTORS
163, 165, Stanley Road, Jaffna.
அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் எமது ஸ்தாபனத்துக்கு -
• BAJAJ BOXER CT DELAXE MODEL, CALIBER, ASPIRE • HERO HONDA PASSION, SPLENDOR • TVS VICTOR, TVS CHAMP, SUZUKI FIERO, MD 90, YAMAHA 50, SUPER CUB LANCER C-50, C-90, CHALLY, ஹெல்மெட் வகைகள் விற்பனைக்கு.
உடனே விஜயஞ்செய்யுங்கள்! தாமதம் வேண்டாம்!!
(C/22769)
யசோ மோட்டோர்ஸ்
163, 165, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. - 2544.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.